# කාර්යසාධන වාර්තාව
# செயற்திறன் அறிக்கை
# Performance Report
# 2016

අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சர் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE



# செயற்திறன் அறிக்கை

பிரதம அமைச்சர் அலுவலகம்

இல.58,சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை

கொழும்பு 07

தொலை பேசி: **011-2575317**

பெக்ஸ்: **011-2574143**

மின்னஞ்சல்: **info@pmoffice.gov.lk**

இணையத்தளம்: **www.pmoffice.gov.lk**

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்க எண் |
|---|---|
| **01. அறிமுகம்** | 1 |
| 1.1 தூரநோக்கு | 1 |
| 1.2 செயற்பணி | 1 |
| 1.3 அலுவல்கள் | 1 - 2 |
| **02. கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி** | 5 |
| 2.1. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு | 6 - 7 |
| 2.2. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழுவின் செயற்பாட்டு நிலையம் | 8 - 9 |
| 2.3. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு | 10 - 11 |
| 2.4. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி துரித வேலைத் திட்டம் | 12 |
| 2.5. 2500 கிராம அரசு அலகுகளை தாபித்தல் | 13 - 14 |
| 2.6. அரச சேவை வழங்கல் அதிகார சபையை தாபித்தல் | 15 |
| 2.7. துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தல் | 16 - 17 |
| 2.8. மீன் ஏற்றுமதித் தடையை நீக்குதல் தொடர்பான குழு | 18 - 19 |
| 2.9. GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளல் | 20 - 21 |
| 2.10. ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகம் கொழும்பு மற்றும் டொக்கியோவில் அமைத்தல் | 22 |
| 2.11. கொள்கை உருவாக்கல் அலுவலகம் | 23 |
| 2.12. கல்வி மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு | 24 - 25 |
| 2.13. தேசிய ஊடக மத்திய நிலையம் | 26 - 27 |
| **03. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு** | 29 |
| 3.1. பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள் | 30 |
| 3.1.1. சுவிட்சர்லாந்துக்கான விஜயம் - உலக பொருளாதார மாநாடு-2016 | 30 - 31 |
| 3.1.2. தென் கொரியாவுக்கான விஜயம் - ரொட்டரி சர்வதேச மாநாடு | 32 |
| 3.1.3. சிங்கப்பூருக்கான விஜயம் | 33 - 34 |
| 3.1.4. இந்தோனேசியாவுக்கான விஜயம் -உலக இஸ்லாமிய பொருளாதார மாநாடு | 35 |
| 3.1.5. சீனாவுக்கான விஜயம் | 36 - 37 |

3.1.6. சிங்கப்பூருக்கான விஜயம் - இந்து சமுத்திர மாநாடு -2016 .................. 38

**தலைப்பு** **பக்க எண்**

3.1.7. நியூசிலாந்துக்கான விஜயம் .................. 39

3.1.8. இந்தியாவுக்கான விஜயம் .................. 40

3.1.9. பெல்ஜியத்துக்கான விஜயம் .................. 41

3.2. இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்தல் .................. 42 – 44

**04. தேசிய நல்லிணக்கம், சமூக நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள்** .................. 45

4.1.தேசிய நல்லிணக்கம் .................. 46

4.1.1. நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம் .................. 47 - 48

4.1.2. அரசியல் யாப்பு மறுசீரமைப்புக்காக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் குழு .................. 49 - 50

4.2. சமூக சேவைகள் .................. 51

4.2.1. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விழாக் கொண்டாட்டம் .................. 51

4.2.2. இரத்த தான நிகழ்ச்சி .................. 52

4.2.3. மீரிகம முதியோர் இல்லத்தின் புனரமைப்பு நடவடிக்கை .................. 52

4.3. மத அலுவல்கள் .................. 53

4.3.1. கொழும்பு நவம் மகா பெரஹரா .................. 53

4.3.2. அலரி மாளிகையில் ஆயிரம் பிக்குமார்களுக்கு தானம் வழங்கிய புண்ணிய நிகழ்வு .................. 54

4.3.3. புனித தாதுக்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதிமிக்க பொருட்களை காட்சிப்படுத்தல் .................. 55 - 56

4.3.4. புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம் .................. 57

4.3.5. இப்தார் வைபவம் .................. 58

4.3.6 கொள்ளுப்பிட்டி வாலுக்காராம விஹாரையின் வருடாந்த பெரஹரா .................. 59

4.3.7 தீபாவளி வைபவம் .................. 60

**05. பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்** .................. 61

5.1. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் .................. 62 - 63

5.2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும

வசதிகள் ........................................................ 64

**தலைப்பு** **பக்க எண்**

**06. பாராளுமன்றம் மற்றும் சட்ட ரீதியான அலுவல்கள்** ........................ 65

6.1. பாராளுமன்ற அலவல்கள் ........................................ 66

6.1.1. அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள், பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல் ........................ 66

6.1.2 பாராளுமன்ற அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல் ........................ 67

6.2. சட்ட ரீதியான அலுவல்கள் ........................................ 68 - 69

**07. மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்** ........................ 71

7.1. மனித வளங்கள் அபிவிருத்தி ........................................ 72 - 73

7.2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் ........................ 74 - 76

7.3. அலரி மாளிகை வளவின் முகாமைத்துவம் ........................ 77

**08. நிதிசார் முன்னேற்றம்** ........................................ 79

8.1. நிதிசார் முன்னேற்றம் ........................................ 80 - 81

# 01. அறிமுகம்

## 1.1 தூரநோக்கு

"சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கிமிக்கதோர் இலங்கை"

## 1.2 செயற்பணி

"இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு மற்றும் அவர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றிற்கான தலைமைத்துவத்தை வழங்குதல்."

## 1.3 அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பிரதான அலுவல், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவல்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதாகும்.

அத்துடன், அரசாங்கத்தின் தேர்தல் பிரகடனமான **"60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐந்து அம்ச செயற்பாடு"** இன் பிரகாரம்,

- தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்
- ஊழலை பூண்டோடு ஒழித்தல்
- சுதந்திரத்தை உறுதி செய்தல்
- உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- கல்வியறிவை மேம்படுத்தல்

போன்ற அலுவல்களை செயற்படுத்துவதற்காக இந்த அலுவலகம் ஒத்துழைப்பு வழங்கும்.

மேலும்,

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.
- கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்கு பதில்களை தயாரித்தல்.
- கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு வெளிநாட்டு தூதுக் குழுக்கள், வெளி நாட்டு தூதரக சேவை அதிகாரிகளுடன் தொடர்புகளை பேணி வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- கௌரவ பிரதமரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்
- கௌரவ பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடகங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- விசேட சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- கௌரவ பிரதமரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அலரி மாளிகை, பிரதம அமைச்சர் அலுவலகம், கௌரவ பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

# 02. கொள்கை உருவாக்கல் பொருளாதார அபிவிருத்தி

## 2.1.பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு

பொருளாதார முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 2015.09.22 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு தாபிக்கப்பட்டதுடன், இந்தக் குழுவின் அலுவல்கள் பின்வருமாறு;

1) பொருளாதார அலுவல்கள், நிதி மற்றும் நிதிக் கொள்கை மற்றும் அரச நிதிசார் அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை நிருபங்களை பரிசீலணை செய்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.
2) தேசிய முதலீட்டுத் திட்டம், அரச முதலீட்டுத் திட்டம் போன்றவற்றை தயாரிக்கும் போது வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் தனியார் துறை முதலீடுகளுக்கான வசதிகளை வழங்குதல்.
3) பொருளாதார மற்றும் நிதிசார் சிக்கல்களுடன்கூடிய பிரேரணை சம்பந்தமாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்
4) நாட்டின் முதலீடு /பொருளாதார அபிவிருத்தி மீது நேரடியான தாக்கத்தை செலுத்தும் பல்வேறு சட்டங்கள் அமுல்படுத்தப்படுத்தப்படும் விதத்தை கண்காணிப்புக்குட்படுத்தல்.

### குழு அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | கௌரவ ரணில் விக்ரமசிங்க | பிரதம அமைச்சர் (தலைவர்) |
| 2. | கௌரவ நிமல் சிரிபால த சில்வா | போக்குவத்து அமைச்சர் |
| 3. | கௌரவ ரவூப் ஹகீம் | நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் |
| 4. | கௌரவ அனுர பிரிதர்ஷன யாப்பா | அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் |
| 5. | கௌரவ ரவி கருணாநாயக்க | நிதி அமைச்சர் |
| 6. | கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் |
| 7. | கௌரவ கபீர் ஹாஸீம் | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் |
| 8. | கௌரவ அர்ஜுன ரணதுங்க | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் |
| 9. | கௌரவ சாகல ரத்னாயக்க | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் |
| 10. | கௌரவ மலிக் சமரவிக்ரம | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்த அமைச்சர் |
| 11. | கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம | விசேட கடமைப் பொறுப்புக்கள் அமைச்சர் |

செயலாளராக பிரதம அமைச்சரின் செயலாளர் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் செயலாளராக நடவடிக்கை மேற்கொள்கின்றார்.

2016 ஜனவரி முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குள் 43 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இக்கூட்டங்களின் போது பிரதான பொருளாதாரப் பிரச்சினைகள், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மற்றும் நிதி அபிவிருத்தி மூலோபாயங்கள், உள்நாட்டு வர்த்தகம், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை, புதுப்பிக்கத்தக்க சக்திகள், பெருந்தெருக்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் தொடர்பான 931 பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

## 2.2. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் செயற்பாட்டு நிலையம்

பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான அமைச்சரவை குழு எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குமுகமாக பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான அமைச்சரவை குழுவின் தேசிய செயற்பாட்டு நிலையம் அலரி மாளிகையில் தாபிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் இணைத் தலைவர்களாக விசேட கடமைப் பொறுப்புக்கள் அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ நிரோசன் பெரேரா ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்வதுடன், பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் சரித்த ரத்வத்தே மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் ஆகியோர் குழு அங்கத்தவர்களில் அடங்குகின்றனர்.

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழுவின் செயற்பாட்டு நிலையத்தில் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழுக் கூட்டங்களுடன் இணையான வகையில் 2016 ஆம் ஆண்டில் 30 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இக் கூட்டங்களை நடாத்தியதன் நோக்கம், அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செலுத்தும் பல்வேறு பிரிவுகளின் செயற் திட்டங்கள் மீது கவனத்தைச் செலுத்தி நிலவும் பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். அதற்கிணங்க, தற்போது சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை விருத்தி செய்தல் மற்றும் முதலீட்டுத் திட்டங்கள், மின்சாரம் மற்றும் சக்தி வளத் திட்டங்கள் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் காணி சுவீகரிப்பு போன்ற பல துறைகளில் நிலவிய பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழுவின் செயற்பாட்டு நிலையத்துடன் தொடர்பான நிர்வாக மற்றும் நிதிப் பிரிவொன்று 2016 ஜூலை மாதம் 05 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவத்துக்குத் தேவையான மறுசீரமைப்பு மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் இக் குழுவை நியமித்தலின் நோக்கமாகும்.

அது தவிர பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் சரித்த ரத்வத்தே அவர்களின் வழிகாட்டலின் கீழ் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழு செயற்பாட்டு நிலையத்தினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களை ஒருங்கிணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1) நெல் கொள்வனவு வேலைத் திட்டத்தை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல் - பெரும்போகம் - 2016

(அம்பாறை, குருநாகல்,பொலன்னறுவை மற்றும் ஏனைய மாவட்டங்களில் நெல் கொள்வனவு தொடர்பான முன்னேற்றம் கணக்காணிக்கப்பட்டதுடன், நெல் கொள்வனவின் இலக்கினை அடைந்ததன் பின்னர் இத் திட்டம் 2016 மே மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.)

2) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து நாடு பூராவும் ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல்.(இதுவரை கிழக்கு, வடக்கு, சப்ரகமுவ, ஊவா போன்ற மாவட்டங்களில் 451 ஆசிரியர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.)

3) உடற் கல்வி ஆசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல் - ஆரம்பக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனம் மற்றும் செயற் திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்துடன் இணைந்து ஒன்றிணைந்த சமூக பாதுகாப்புத் தரவுத் தொகுதியைத் தயாரித்தல்.

5) அரச சார்பற்ற அமைப்புக்கள் சம்பந்தமாக தேசிய செயலகம் மற்றும் மக்கள் வங்கியுடன் இணைந்து நுண்பாக நிதிக் கடன் சட்டத்தை நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல்.

6) தேசிய இளைஞர் படையணி மற்றும் இளைஞர் சேவைகள் முன்னோடித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்

7) நாடு பூராவும் 900 இரத்தக் கூழ்மப் பிரிப்பு இயந்திரங்களைத் தாபித்தல் சம்பந்தமான செயற் திட்டத்தின் அடிப்படைக் கலந்துரையாடல் Health Services PVT LTD India மற்றும் சுகாதார அமைச்சுடன் நடாத்தப்பட்டதுடன் திட்டத்தின் எதிர் கால நடவடிக்கைகளை செயற்படுத்தும் அலுவலை சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

8) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக நடாத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள்)

## 2.3. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக பிரதம அமைச்சர் 2015.10.09 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவை நியமித்தார். இலங்கையின் மொத்தப் பொருளாதாரத் துறைக்கும் கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்கும் முக்கிய நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் இக் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**குழு அங்கத்தவர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆர் பாஸ்கரலிங்கம் | சிரேஷ்ட ஆலோசகர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு (தலைவர்) |
| 2. | திரு.ஜே. சரித்த ரத்வத்தே | பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் |
| 3. | திரு.சுமித் அபேசிங்க | அமைச்சரவைச் செயலாளர் |
| 4. | கலாநிதி திரு ஆர் எச் எஸ் சமரதுங்க | நிதியமைச்சின் செயலாளர் |
| 5. | திரு. எம் ஐ எம் ரபீக் | செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 6. | திரு எம் சீ எல் ரொட்ரிகோ | மேலதிக செயலாளர், பிரதம அமைச்சர் அலுவலகம் |

**குழுவின் அலுவல்களாவன;**

1) பொருளாதார அலுவல்கள், அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆய்வு செய்து அது தொடர்பாக பரிந்துரைகளை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பித்தல்.
2) தனியார் துறை முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் பல்வேறு செயற் திட்ட அறிக்கைகள் தொடர்பாக பொருத்தமான கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்குதல்.
3) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் கவனத்திற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
4) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

2016 ஆம் ஆண்டில் இக் குழுவின் 35 கூட்டங்கள் நடாத்தப்படுள்ளது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினால் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் ஏனைய 486 கோரிக்கைகளுக்கு இக் குழுவினால் அவதானிப்பு மற்றும் சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.

## 2.4. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி துரிதத் திட்டம்

“60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐம்பெரும் திட்டத்”தின் பிரகாரம் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் திரு. பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையில் பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு.ஜே.சரித்த ரத்வத்தே உட்பட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை இணைந்து (Public Private Partnership) நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக இதுவரை 06 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| இல. | திட்டம் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நுக கஹ கனத்தவத்த - பானதுறை | 196 |
| 02 | தம்புவாவத்த - ராகமை | 124 |
| 03 | வெரெல்லவத்த லங்காலோக காணி - யக்கலை | 669 மற்றும் சுப்பர் மார்க்கட் (சந்தை தொகுதி) |
| 04 | இஸ்காகாரவத்த - குண்டசாலை | 340 |
| 05 | மவுன்ட் கிளிபர்ட்வத்த - ஹோமாகமை | 600 |
| 06 | ஜல்த்தர கட்டம்II- ஹோமாகமை | 352 |

இங்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக பொது வசதிகளைக் கொண்ட காணிகளைப் பெற்றுக்கொடுத்தல், குழாய் நீர், மின்சாரம், பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தை துரிதமாகப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

மேலும், பயனாளிகளுக்கு வீடுகளை விற்பனை செய்யும் விலைகளையும் அரசாங்கமே தீர்மானிக்கும். அத்துடன் பயனாளிகளுக்கு வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக சலுகை வட்டி அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.5. 2500 கிராம அரசு (கிராம ராஜ்ய) அலகுகளை தாபித்தல்

கிராமிய பிரதேசங்களின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்தி, சமூக நலனோம்புகை, சொத்துரிமையை உறுதிப்படுத்தல் போன்ற எண்ணக்கருக்களின் ஊடாக கிராம அபிவிருத்தி செயற்பாடுகளை முறைப்படுத்தி தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஐம்பெரும் கொள்கைக்கமைய கிராம அரசு அலகுகள் எனும் பெயரில் 2500 கொத்தணிக் கிராமங்கள் தாபிக்கப்படும்.

உத்தேச திட்டத்திற்கமைய, கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 04 அல்லது 05 இனை ஒன்றிணைப்பதன் ஊடாக கிராம அரசு அலகொன்று தாபிக்கப்படும். "கிராமீன் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு"வின் கீழ் முழுமையான பொருளாதார மத்திய நிலையங்கள் இந்த கொத்தணிக் கிராமங்களில் தாபிக்கப்படுவதுடன், கிராமத்தின் நிர்வாக நடவடிக்கைகளை அந்தக் கிராமவாசிகளே மேற்கொள்வார்கள். ஒரு பிரதேச செயலாளர் பிரிவினுள் 08 அல்லது 10 வரையிலான கிராம அரசு அலகுகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் இந்த நிர்வாகப் பிரிவானது ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் துணை சேவைகள் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு கிராமங்களுக்கும் தேவையான நிதி மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாகஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராம அரசு அலகுகளின் நோக்கம்;

1) நாட்டின் நிலையான சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் போன்ற பிரிவுகளின் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துமுகமாக உள்ளூர் பிரஜைகளின் பங்கேற்பை செயற்பாடுமிக்க மற்றும் அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தி முன்னர் நிச்சயிக்கப்பட்ட பிரதேசத்தினுள் நிறுவனப் பொறிமுறையொன்றாக செயற்படுவதற்கு வாய்ப்பளித்தல்;

2) சிறப்பாக பாதுகாக்கப்பட்ட மற்றும் இயற்கை வளங்களைக் கொண்ட சூழல், ஆரோக்கியமான மக்கள், கற்ற மக்கள், சமூக உபசரணை மற்றும் நீதி நிலைநாட்டப்படும் சமூகம், பொருளாதார செழிப்பு, உயர் தரமான உற்பத்திக் கொள்ளளவு, சமூக ஒற்றுமை, சேவைகளை வழங்குதல் மற்றும் பயன்பாடு போன்ற காரணிகளைக் கொண்ட உறுதியான சமூகமொன்றினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு;

3) பிரதேசத்தின் அபிவிருத்தியுடன் தொடர்பான மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய பிரஜைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக குரல் கொடுத்து பிரஜைகள் மற்றும் அரசாங்கத்துக்கிடையிலான சாதகமான தொடர்பை எற்படுத்துவதற்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்குதல் மற்றும் பரஸ்பர ரீதியில் பயன்மிக்க பின்னூட்டல் பொறிமுறையொன்றை உருவாக்குதல் ;

2500 கிராம அரசு அலகுகளை தாபிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட எண்ணக்கருத்தியல் பத்திரம் அமைச்சரவையின் அவதானிப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவை பாராளுமன்றத்தின் உள்ளக நிர்வாக மற்றும் அரச முகாமைத்துவம் சம்பந்தமான பிரிவு மேற்பார்வை குழுவின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டள்ளது. அதற்கமைய, பிரிவு மேற்பார்வை குழுவினால் கிராம அரசு எண்ணக்கருத்தியல் பத்திரத்தை தயாரிப்பத்தலுடன் தொடர்பான குழுவுடன் கலந்துரையாடியதுடன், குழுவின் அவதானிப்புக்கள் எதிர் காலத்தில் கிடைக்கப்பெறவுள்ளது.

## 2.6. அரச சேவைகள் வழங்கல் அதிகார சபையை தாபித்தல்

மாகாண அரச சேவை மற்றும் நிறுவனங்கள் உட்பட அரச சேவை ஊடாக பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை உறுதிப்படுத்துமுகமாக அரச சேவைகள் வழங்கல் அதிகார சபையொன்றை தாபித்தல் சம்பந்தமாக ஆய்வு செய்வதற்காக பல்துறை கற்றறிந்தோர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அய்வுக் குழுவினால் வெளியிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட அதிகார சபையை தாபிப்பதற்கான சட்ட மூலத்தை வரைவதற்காக சொலிஷிட்டர் ஜெனரலின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவானது சட்ட வரைஞரின் பிரதிநிதிகள், சட்ட மா அதிபர், ஜனாதிபதி செயலகம் மற்றும் பல்வேறு அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஓய்வு பெற்ற அரச சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ளது.

அரச சேவை வழங்கல் அதிகார சபையினை தாபிப்பதன் முக்கிய நோக்கம் :

- மக்களை மையமாகக் கொண்ட அரச சேவையொன்றை உறதிப்படுத்தல்
- பொது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வினைத்திறன்மிக்க, சிறந்த உயர் தரமான சேவையை பொது மக்களுக்கு வழங்கும் விதத்தில் அரச சேவையை மற்றும் அரச நிறுவனங்களை வழிநடாத்தல்
- அரச துறை ஊழியர்களை ஊக்குவித்தல், அவர்களது செயற் திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் அவர்களுக்கு பயிற்சி அளித்தல்
- காலத்தின் தேவைகளின் அடிப்படையில் பொருத்தமான சேவைத் தரங்களை தாபித்தல் மற்றும் அதனுடன் இயைந்து செல்வதற்காக அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சகல அரச சேவைகளுக்கும் பக்கச்சார்பற்ற மற்றும் நீதியான பிரவேசத்தை ஏற்படுத்தல் மற்றும் சேவை பெறுநர்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்
- வினைத்திறன்மிக்க மற்றும் நட்புறவுச் சேவையொன்றின் நிமித்தம் பிரஜைகள் - சேவை பெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்

குழுவினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலம் அவதானிப்புக்காக அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையினால் பாராளுமன்றத்தின் உள்ளக நிர்வாக மற்றும் அரச முகாமைத்துவம் சம்பந்தமான பிரிவு மேற்பார்வை குழுவின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டள்ளது. அதற்கமைய, பிரிவு மேற்பார்வை குழுவின் அவதானிப்புக்களை 2017 ஜனவரி மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.7. துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தல்

துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கடல் பகுதியை மீட்டு ஆடம்பர ஹோட்டல்கள் மற்றும் வீட்டுத் தொகுதி, வணிக வளாகம், அலுவலகத் தொகுதி மற்றும் பொழுதுபோக்கு படகுத் துறைமுகம், காரோட்டப் பந்தய ஓடுபாதை போன்ற ஒய்வுக்கான மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்கான நிலப் பகுதியை அபிவிருத்தி செய்தல் நோக்கமாக இருந்ததுடன், இந்த செயற் திட்டத்தை செயற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் சீனாவின் ஷய்னா கமியுனிகேஷன் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி எனும் கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தது.

2016 மார்ச் மாதத்தில் கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையின் கீழ் மீண்டும் துறைமுக நகரை நிர்மாணிப்பதற்கான ஆற்றல் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் அங்கு இந்த திட்டம் தொடர்பாக எழுந்துள்ள முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வரை மற்றும் குறைநிரப்பு சூழல் சார்ந்த தாக்கங்கங்களை மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடையும் வரை துறைமுக நகரின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இத் திட்டத்துடன் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையில் செயலாளர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக் குழு குறிப்பிட்ட சீனக் கம்பனியுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்களை நடாத்தி அந்த ஒப்பந்தத்தை மீண்டும் மீளாய்வுக்குட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

செயற் திட்டம் பற்றிய மீளாய்வுக்குப் பின்னர் ஒப்பந்தத்தை திருத்தியமைப்பதற்கு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கமைய, குறைநிரப்பு சூழல் சார்ந்த தாக்கங்கங்களை மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் செயற் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அபிவிருத்தி அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்கும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

ஆரம்ப ஒப்பந்தத்தின் கீழ் பாதிப்புக்குட்படும் மீனவர் சமூகத்திற்கு நட்டஈடு செலுத்தும் நடவடிக்கை முழுமையாக இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்ததுடன் புதிய திருத்தத்தின் கீழ் அவ்வாறு செலுத்த வேண்டிய நட்டஈட்டுக்காக பங்களிப்பைச் செலுத்துவதற்கு செயற் திட்டக் கம்பனி இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளது. அதற்கமைய பாதிப்புக்குட்பட்ட மீனவர் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செயற் திட்டக் குழுவின் ஊடாக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அது மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் தனியான நடைமுறையின் பிரகாரம் உரிய முறையில் பயன்படுத்தப்படும் வகையில் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இத் திட்டத்தின் கீழ் மீட்கப்படும் நிலப்பகுதி வேறான சட்ட முறைமையொன்றின் கீழ் நிதி நகரமாக பயன்படுத்தப்படும் எனும் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்துடன் மீண்டும் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் செயற் திட்டக் கம்பனி இணக்கம் தெரிவித்துள்ளது. நிதி

நகரை தாபித்தல் மற்றும் நிதி நகரத்தை கூட்டிணைத்தல் நடவடிக்கை தனியான பாராளுமன்ற சட்டமொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையிலான இந்த செயலாளர்கள் குழு தற்போது உத்தேச நிதி நகரத்திற்கான சட்டரீதியான வரையறை, வணிகத் திட்டம் மற்றும் முதலீட்டுத் திட்டத்துக்குப் பொறுப்பாக நடவடிக்கை மேற்கொள்வதுடன், உரிய தரப்பினருக்கு வழிகாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டவாறு துறைமுக நகர் செயற்திட்ட நடவடிக்கை வழிநடாத்துகின்றது.

செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் மூலோபாய ரீதியிலான சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக செயற் குழுவொன்றை (Steering Commmittee) நியமித்துக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த சிக்கல்கள் பல்வேறு துறைகளுடன் தொடர்புடையதாக இருப்பதனால் குறிப்பிட்ட துறைகளுடன் தொடர்புடைய தரப்பினர்களை இணைத்துக்கொண்டு குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு "Joint Working Groops" நியமித்துக் கொள்ளும் நடவடிக்கை அதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

## 2.8. மீன் ஏற்றுமதித் தடையை நீக்குதல் தொடர்பான குழு

சட்ட விரோதமான, ஒழுங்குமுறைக்குட்படாத மீன் பிடி நடவடிக்கைகள் தொடர்பாக போதுமானளவு கவனத்தை ஈர்ப்பதில்லையென்ற விடயத்தை வலியுறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியமை காரணமாக இலங்கை மேற்கொண்டுவரும் கடல் உணவுகள் ஏற்றுமதியை தடை செய்வதற்கு 2014 ஒக்டோபர் மாதத்தில் ஐரோப்பிய ஆணைக் குழு நடவடிக்கை எடுத்தது. இந்தத் தடை 2015 ஜனவரி 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது. ஐரோப்பிய சங்கத்தின் அங்கத்துவ நாடுகளுக்கு புதிய மற்றும் குளிரூட்டப்பட்ட 'தலப்பத்' மற்றும் 'பலயா' போன்ற மீன் வகைகளை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக இலங்கை விளங்குவதுடன், 2013 ஆம் ஆண்டில் அந்த ஏற்றுமதி வருமானத்தின் பெறுமதி 74 மில்லியன் யூரோவாகும். அதற்கமைய, இந்தத் தடை காரணமாக இலங்கைக்கு சுமார் 100 மில்லியன் அமெ.டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய சங்கம் சட்ட விரோதமான, அறிக்கைப்படுத்தப்படாத மற்றும் கட்டுப்பாடு இன்றிய மீன் பிடி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விதி முறைகளின் கீழ் இலங்கை ஒத்துழைப்பு வழங்காத நாடாக பட்டியல்படுத்தப்படல், நீக்கப்படுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைக்கு பிரதம அமைச்சர் செயற் குழுவொன்றை நியமித்ததுடன் மீன் பிடித்துறை அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, வர்த்தகத் திணைக்களம், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் கடல் உணவு ஏற்றுமதியாளர் சங்கம் போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்தக் குழுவின் தலைவராக பிரதம அமைச்சரின் செயலாளர் நியமிக்கப்பட்டார்.

செயற் குழுவின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் கடந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட முக்கிய அலுவலாக படகுகளை அவதானிக்கும் நிலையமொன்றை தாபித்தல், தேவையான ஒழுங்கு விதிகள் மற்றும் தடைகளை அறிமுகஞ் செய்தல், மேலதிக வரவு செலவு நிதியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் என்பன உள்ளடக்கப்பட்டது.

மீன் ஏற்றுமதித் தடையை நீக்கிக் கொள்வதற்காக பின்பற்றும் முறையின் முன்னேற்ற மீளாய்வில் ஈடுபடும் செயற் குழு பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு ஊடாக அமைச்சரவைக்கு அறிக்கைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் ஐரோப்பிய ஆணைக் குழுவில் சமுத்திர நடவடிக்கைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் முன்னேற்றம் பற்றி தொடரந்தேர்ச்சியானன கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் முகாமைத்துவ நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2015 நவம்பர் மாதத்தில் தூதுக் குழுவொன்று இங்கு விஜயமொன்றை மேற்கொண்டது.

அதற்கமைய 2016 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி மீன்பிடித் துறை அதிகாரிகள் மற்றும் சமுத்திர நடவடிக்கைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற இறுதித் தீர்மானமொன்றுக்கு வரும் கலந்துரையாடலின்போது மீன் பிடிக் கைத்தொழிலுக்கு விரிவான மற்றும் பலமான முகாமைத்துவ செயல்முறைக்கு சட்ட விரோதமான, அறிக்கைப்படுத்தப்படாத

மற்றும் கட்டுப்படுத்தப்படாத மீன்பிடி நடவக்கைகளை கட்டுப்படுத்தும் முறைகளை இலங்கை பின்பற்றுவதாக சமுத்திர நடவடிக்கைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் ஏற்றுக் கொண்டார்.

தமது பொறுப்புக்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசு என்ற வகையில் இலங்கையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், சமுத்திர சட்டங்களுடன் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பு இணக்கப்பாட்டின் 94, 117 மற்றும் 118 ஆம் உறுப்புரைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மீன்பிடித் துறை வர்த்தக ஒப்பந்தத்தின் 18,19 மற்றும் 20 ஆம் உறுப்புரைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு போதுமானதாகுமென ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இலங்கையை பட்டியலில் சேர்ப்பதற்கு அடிப்படையாக அமைந்த பின்னணி சீர் செய்யப்பட்டுள்ளது என்பது இலங்கையினால் முன்வைக்கப்பட்ட விடயங்களின் ஊடாக உறுதிப்படுத்தப்படுவதாகவும், நீண்ட காலமாக அது தொடர்பாக உயர்ந்த அளவிலான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கான துரித நடவடிக்கையை இலங்கை மேற்கொண்டுள்ளது என்பதும் ஆணைக்குழுவின் முடிவாகும்.

மேற் குறிப்பிடப்பட்ட சகல விடயங்களின் அடிப்படையில் 2016 ஜூன் மாதம் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒத்துழைப்பு வழங்காத மூன்றாவது நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குதல் வேண்டுமென ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, இலங்கையிலிருந்து ஐரோப்பா சங்கத்திற்குரிய நாடுகளுக்கு மீண்டும் மீனை ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், மீன் உற்பத்தி ஏற்றுமதியின் ஊடாக பொருளாதாரத்திற்கு 100 மிலிலியன் அமெரிக்க டொலர் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.9. GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளல்

2009 மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, இலங்கையில் உரிமைகள் மற்றும் அபிவிருத்தி பாதுகாக்கப்பட்ட நிலைமையொன்றை நிலைநிறுத்திக்கொள்ளும் நடவடிக்கையில் இலங்கை பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், அதன் பின்னர் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான விடயத்தில் கணிசமான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையும் நாட்டுக்கு ஏற்பட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக, ஐரோப்பிய ஆணைக் குழு மற்றும் இலங்கைக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடல் சம்பந்தமாக ஐரோப்பிய ஆணைக் குழுவினால் 2010 ஜூன் 17 ஆம் திகதி அன்றைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எழுத்து மூலமான அறிக்கையைப் பெற்றுக் கொண்டதுடன் அதில் GSP+ சலுகை நன்மையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை கவனம் செலுத்த வேண்டிய ஆனாலும் தீர்க்கப்படாத 15 சிக்கல்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

2016.07.12 ஆம் திகதி அந்த 15 சிக்கல்களின் கீழ், விண்ணப்பத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை உண்மையிலேயே தேவையான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதனை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான தகவல்களை முன்வைக்குமாறு ஐரோப்பிய சங்கம் இலங்கையிடம் கேட்டுக்கொண்டது. ஒப்படைக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் அந்த விண்ணப்பத்தை பகுப்பாய்வு செய்வதற்கு மற்றும் ஏற்புடையதாகும் தேர்வளவுகளை நிறைவு செய்திருப்பின் இலங்கைக்கு GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கான பிரேரணையை முன்வைப்பதற்கு 2016.07.12 ஆம் திகதி முதல் 2017.01.12 ஆம் திகதி வரையிலான 06 மாத கால அவகாசம் ஐரோப்பிய சங்கத்திற்கு உண்டு.

58 செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்ட சட்டகத்தை கால இடைவெளியுடன் 2016 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஐரோப்பிய சங்கத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, கால இடைவெளியுடன் 2016 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு அறிவித்துள்ளது. 58 செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கி இற்றைப்படுத்தப்பட்ட சட்டகம் மற்றும் 2016 செப்டெம்பர் மாதம் பிரதம அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் முன்வைக்கப்பட்ட முடிவுகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஐரோப்பிய ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாக உரிய தரப்பினருடன் பல முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் பிரதம அமைச்சரது செயலாளரின் தலைமையில் நடைபெற்றதுடன், இது தொடர்பான மேலும் கலந்துரையாடுவதற்காக பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், 2016 ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பிரசல்ஸில் ஐரோப்பிய சங்கத்தின் தலைவர்கள் மற்றும் தூதுவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒப்பந்த நிறுவனங்கள் உட்பட ஏனைய பல்தரப்பு நிறுவனங்களுடன் பேணி வரப்படும் மற்றும் தொடர்புகளை மென்மேலும் பலப்படுத்திக்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் கொள்கை அளவிலான தீர்மானத்தையும் எடுத்துள்ளது. ஐரோப்பா சங்கத்துடன் இலங்கை பேணி வரும் சாதகமான தொடர்புகள் மற்றும் அதற்கமைய, நல்லாட்சி, சட்டத்தின் ஆதிக்கம் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்புடைய ஐரோப்பிய ஆணைக் குழு இலங்கைக்கான செயற்பாட்டுச் சபையொன்றை தாபித்தலும் இந்தக் கொள்கையின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே, ஐரோப்பிய ஆணைக் குழுவுடன் காணப்படும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதனைப் போன்றே நல்லாட்சி, சட்டத்தின் ஆதிக்கம், மனித உரிமைகளைஇலங்கையில் பாதுகாத்துக் கொள்ளல், விருத்தி செய்தல் மற்றும் நிறைவேற்றிக் கொள்ளும் விடயத்தில் அரசாங்கத்தின் தீவிர அர்ப்பணிப்பும் GSP+ சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2.10. ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகத்தை கொழும்பு மற்றும் டோக்கியோவில் தாபித்தல்

2015 ஒக்டோபர் மாதம் பிரதம அமைச்சரின் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்களினால் ஒன்றிணைந்த ஒத்துழைப்பை வெளியிடுதல் சம்பந்தமாக இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இது இலங்கை அரசாங்கம் 60 மாத காலத்தினுள் செயற்படுத்தும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் அடங்கும் சர்வதேச ஒப்பந்தங்களில் ஒரு ஒப்பந்தமாகும்.

இலங்கையின் தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் மையத் துறைகளாக இனங்காணப்பட்டுள்ள உயர் தரத்திலான விவசாயம், கைத்தொழில்களுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம், உயர் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி, கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் சிவில் பாதுகாப்பு போன்ற பிரிவுகள் மீது இதனூடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உத்தேச ஒன்றிணைந்த ஒத்துழைப்பின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் முக்கிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், குறிப்பிட்ட அரச நிறுவனங்களின் ஊடாக துரிதமான செயற்பாட்டினை இலகுபடுத்துமுகமாக இரு நாடுகளினதும் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் அலுவலை இந்தச் செயலகம் மேற்கொள்ளும்.

1) சமநிலையான மற்றும் பூரண அபிவிருத்தியை ஏற்படுத்தல்
2) இலங்கையின் பொருளாதார செயற்பாடுகளை சர்வதேசத்துடன் இணைத்தல்
3) விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தின் சிறப்புத் தன்மையை விருத்தி செய்தல்
4) இலங்கையில் அதி தொழிநுட்பக் கைத்தொழில்களை விருத்தி செய்தல்
5) பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் அபிவிருத்தியை வலியுறுத்தி இ - அரச நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்களினால் ஒன்றிணைந்த ஒத்துழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் ஊடாக ஜப்பானின் டோக்கியோவில் மற்றும் இலங்கையில் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ள ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள முடியுமான வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நிறுவன ரீதியிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. டோக்கியோவில் இலங்கை தூதுவராலயத்தில் இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதற்குத் தேவையான பணியாட் தொகுதியை ஆட்சேர்த்து அதனூடாக செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2.11. கொள்கை உருவாக்கல் அலுவலகம்

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்கினை துரிதமாக அடைந்து கொள்வதன் நிமித்தம் தெளிவான, ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நியாயமான கொள்கைகளை உருவாக்கும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி ''கொள்கை உருவாக்கல் அலுவலகம்'' பிரதம அமைச்சர் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்தின் அலுவல்களை துரிதப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் இந்த கொள்கை உருவாக்கல் அலுவலகத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1) தேசிய கொள்கைகளை திட்டமிடல், உருவாக்குதல்
2) கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அலுவலை ஒருங்கிணைத்தல்
3) கொள்கைகள் பற்றிய மீளாய்வு மற்றும் மதிப்பீடு
4) இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் மீதான வெளிவாரியான காரணிகளின் அழுத்தம் பற்றிய மீளாய்வு

இந்த அலுவலகம் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்கள் தொடர்பான கொள்கைகள் தொடர்பில் தேவையான வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

1) திவால் சட்டங்களின் கூட்டிணைக்கப்பட்ட சட்டங்ளை மறுசீரமைத்தல்
2) முதலீடுகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
3) தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் குழு

   குழுவின் கீழ் சிறுவர் பாதுகாப்பு, முதியோர் பாதுகாப்பு, கல்விச் சீர்திருத்தங்கள், சுற்றுலாத்துறைக் கைத்தொழில், நிர்மாணங்கள், இலகு பொறியியல், தரவுகள், பிரச்சாரம், ஊழியத்திற்கான கேள்வி பற்றிய ஆய்வு, பெண்கள், மாற்றுத் திறனாளிகள், பாடசாலையிலிருந்து வேலைத் தளத்திற்கு வருபவர்கள் பற்றிய தரவுகள் தொகுதி போன்ற உப குழுக்கள் செயற்படுகின்றன.

4) தேசிய சிவில் விமான சேவை கொள்கைளை உருவாக்கல்
5) மது வரிக் கொள்கை
6) சூரியக் கதிர் மின் உற்பத்திக் கொள்கை
7) காணி சுவீகரிப்புக் கொள்கை
8) ''மிலேனியம் செலேன்ஜ் கோப்பரேசன்'' ஊடாக உதவி பெற்றுக்கொள்ளும் திட்டம்
9) வர்த்தகக் கொள்கை
10) அளவைத் தாண்டிச் செல்லல் பற்றிய அறிக்கை
11) சுகாதாரக் காப்புறுதித் திட்டம் பற்றிய ஆய்வறிக்கை
12) இணைய வழித் தகவல்கள் வாயில் - கிராமிய சந்தை/ வாரச் சந்தைகளை வரைபடப்படுத்தல்
13) மின் சக்தி மற்றும் சக்தி வளங்கள் அமைச்சினால் நடாத்தப்படும் ''சூரிய ஒளிக்கதிர் சக்திப் போராட்டம்'' வேலைத் திட்டத்திற்கு இலகு கடன் முறையொன்றை உருவாக்குதல்
14) நுண்பாக நிதியியல்
15) பாதுகாப்பு வலையமைப்பு பகுப்பாய்வு

## 2.12. கல்வி மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு

எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் பாடசாலைக் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் விரிவான மறுசீரமைப்புத் திட்டமொன்றை ஆய்வுக்குட்படுத்தி வருகின்றது. கல்வியை தேசிய பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய சான்றாக மாற்றியமைத்து உலகளாவிய கல்வித் தரத்தினை அடைந்து கொள்வது இந்த மறுசீரமைப்புச் செயற்பாட்டின் நோக்கமாகும்.

**இங்கு கீழ் குறிப்பிடப்படும் முக்கிய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.**

- தமது திறமைகள், எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய கல்வி முறையொன்றுடன் கூடிய கல்விச் சூழலில் 13 வருடக் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக முழு மாணவர் சமூகத்திற்கும் சந்தர்ப்பத்தை அளித்தல்
- மாணவர்களுக்கு உயர் கல்வி, தொழிநுட்பம் மற்றும் தொழிற் கல்வியை பயன்மிக்க வகையில் பெற்றுக்கொடுத்து தொழில் உலகுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்ப முடியுமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தல்
- தமது திறமைகள் மற்றும் படைப்பாற்றல்கள் ஊடாக உயர் ஆளுமையொன்றை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதார விருத்திக்கு நேரடிப் பங்களிப்பைச் செலுத்தல்
- பாடசாலை செயற்திறன் தொடர்பாக சமூகத் தரப்பினரை அறிவுறுத்தல்

**பாடசாலை சபையை தாபித்தல்**

- வளப் பயன்பாடு மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வினைத் திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் செயற்படுத்தம்போது திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல், சேவை உருவாக்கல் மட்டத்திலேயே பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் ஆரம்ப முகாமைத்துவ அலகொன்றாக பாடசாலையை பலப்படுத்துவதற்கு
- ஜனநாயக பங்கேற்பு கோட்பாடுகளை விருத்தி செய்து மற்றும் பிரதேச சூழலின் தனித்தன்மையை இனங்கண்டு தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களின், பெற்றோரின் மற்றும் சமூக பிரதிநிதிகளின் பங்கேற்பினை அதிகரித்துக் கொள்வதற்கு
- பிரதேச மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் போன்றே உறுதிப்படுத்தப்பட்ட 13 வருடக் கல்வி நோக்கத்தை விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு பாடசாலைகளினால் தொடர்ந்தேர்ச்சியான நடவடிக்கை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல்.

**இலங்கை கல்வி ஆய்வு சபையொன்றை தாபித்தல்**

- திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் சம்பந்தமாக மதிப்பீடு செய்தல் மற்றும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டவண்ணம் தொடர்ந்தேர்ச்சியான செயல்முறையாக பாடசாலை செயலாற்றுகை மீளாய்வை மேற்கொள்ளல்.
- நிபுணத்துவ அறிவு மற்றும் முகாமைத்துவத்திற்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுதல் போன்ற வழிகளின் ஊடாக பாடசாலைகளுக்கு உதவி புரிதல்
- தமது பிள்ளைகளின் செயற்திறன் சம்பந்தமாக பெற்றோரை அறிவுறுத்தல் மற்றும் பாடசாலை செயற்திறன் சம்பந்தமாக பிரஜைகள் தரப்பினரை அறிவுறுத்தல்.

## 2.13. தேசிய ஊடக மத்திய நிலையம்

அரச பொறிமுறையை நடைமுறைப்படுத்தும்போது நல்லாட்சிக் கோட்பாடுகளை சிறப்பான வகையில் செயற்படுத்தி வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் முழுமையான, விசுவாசமான மற்றும் சரியான தகவல்களை பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்.

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தகவலறியும் சட்டத்தை வலுப்பெறச் செய்தல், அரச கட்டமைப்பிற்குள் முறையாக தகவல்கள் சென்றடைவதனை ஊறதி செய்தல் மற்றும் பொது மக்களின் பங்கேற்பு மற்றும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஊடக மத்திய நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் ஊடாக தகவல் பகுப்பாய்வு நடவடிக்கைகள், ஊடக செயற்பாடு, ஊடக வலையமைப்பு மற்றும் தகவல் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுவதுடன் இது தவிர கொள்கை உருவாக்கத்திற்காக பொது மக்கள் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல், அரச உத்தியோகபூர்வ தகவல் வெளியீட்டாளராக செயற்படல், இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தகவல்களை ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிமேதகு ஜனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய ஊடக மத்திய நிலையம் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளர் ஆகியோரால் பெயர் குறிப்பிடப்படும் இருவர் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை உள்ளடக்கிய முத்தரப்பு நிர்வாக சபையொன்றின் கீழ் செயற்படும். குழுவின் தற்போதைய தலைவராக திரு. இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதுடன், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட பயிற்சிபெற்ற பணியாட் தொகுதியொன்று இக் குழுவில் பணியாற்றுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குரிய விசும்பாய அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தில் தகவல் உத்தியோகத்தர், வலைதள எழுத்தாளர்கள் மற்றும் ஊடகப் புலனாய்வு உதவியாளர் போன்ற பதவிகளை வகிக்கும் புதிய உத்தியோகத்தர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்களது பணிகளை மேற்பார்வை செய்வதற்காக மூன்று ஊடகப் பணிப்பாளர்கள் ஊடகக் கண்காணிப்பு, தகவல் வலையமைப்பு, ஊடக அவதானிப்பு மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்களுடைய துறைகளுடன் தொடர்பாக இரு வார கால நிபுணத்துவப் பயிற்சி வழங்கப்பட்டு பகல் - இரவு சுழற்சி முறையின் கீழ் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இலத்திரணியல், அச்சு மற்றும் சமூக ஊடக கண்காணிப்பு அலுவல்கள் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களின் தேவைகளுக்கமைய, பல்வேறு கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நடப்பு நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 03. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு

### 3.1. பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம்

இலங்கையின் பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பொருளாதார, சமூக, அரசியல், சுற்றாடல், சமய மற்றும் கலாசாரம் போன்ற சகல பிரிவுகள் சம்பந்தமாகவும் நிலவும் பரஸ்பர தொடர்புகளை தொடர்ந்தும் பலப்படுத்தும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டதுடன், அதனூடாக இலங்கைக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்தன.

#### 3.1.1. சுவிட்சர்லாந்துக்கான விஜயம் - உலக பொருளாதார மாநாடு 2016

சுவிட்சர்லாந்து டாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு முதல் முறையாக கிடைத்த அழைப்பை ஏற்று இலங்கை பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் 2016 ஜனவரி மாதம் 19 முதல் 24 வரை நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.
இங்கு, பிரதம அமைச்சர் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், பல்வேறு பொருளாதார அமைப்புக்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சமூகத்தை சந்தித்து கலந்துரையாடியதுடன் அதனூடாக வளர்ச்சியடைந்துவரும் இலங்கைப் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் துறைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

1) சுவீடன் பிரதமர் கௌரவ ஸ்டெபான் லொப்வன் அவர்களுடன் நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலுக்கமைய, இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மற்றும் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்

2) இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கிடையில் நிலவும் நீண்ட கால வரலாற்றுப் புகழ்மிக்க தொடர்புகளை மேலும் விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் காலி துறைமுகத்திற்கு மேலதிகமாக இலங்கையில் காணப்படும் 08 நெதர்லாந்து துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.

3) நெதர்லாந்தின் பிலிப்ஸ் லய்டின் சொலியுசன்ஸ் கம்பனியின் சர்வதேச தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர் எரிக் ரொடொலொட் அவர்களுடன் நடைபெற்ற இரு தரப்புக் கலந்துரையாடலுக்கமைய சக்தி வினைத்திறனை ஏற்படுத்தல், சூரியக் கதிர் சக்தி முறைப் பயன்பாடு, கஷ்டப் பிரதேசங்களுக்கு புவி – ஒத்தசைவுத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல் போன்ற துறைகள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது.

4) மெகன்ஸி என்ட் கம்பனியின் ஆசிய பிராந்திய தலைவர் கெவின் ஸ்னீடர் அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கமைய அரச துறையில் சேவை விரிவாக்கத்தை மேம்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை ஈடுசெய்தல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.








### 3.1.2. தென் கொரியாவுக்கான விஜயம் - ரொட்டரி சர்வதேச மாநாடு

தகவல் தொழிநுட்பத் துறையில் உயர் அபிவிருத்தி மற்றும் கலாசார ரீதியாக பின்னிப் பிணைந்த சமூகமாக கொரியாவின் தற்போதைய வெற்றி மற்றும் அபிவிருத்தி என்பதனை தொனிப் பொருளாகக் கொண்டு 2016 மே மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் 01 ஆம் திகதி வரை தென் கொரியாவின் சோல் நகரில் நடைபெற்ற 107 ஆவது ரொட்டரி சர்வதேச மாநாட்டில் பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டில் 106 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 50,000 இற்கும் அதிகமான அங்கத்தவர்கள் கலந்து கொண்டதுடன், பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் பிரதான உரையை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் விசேட அதிதிகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பென்கீ மூன் மற்றும் தென் கொரிய பிரதமர் கௌரவ ஹ்வங் கியோ ஆன் கலந்து கொண்டதுடன் அங்கு இலங்கையின் பொருளாதார, சமூக, கலாசார, அரசியல், கல்வி மற்றும் தொழிநுட்ப துறைகளின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர் கால எதிர்பார்ப்புக்கள் சம்பந்தமான தகவல்களை சமர்ப்பிக்க முடியுமாகியமையை ஒரு விசேட நிகழ்வாகக் குறிப்பிடலாம்.






### 3.1.3. சிங்கப்பூருக்கான விஜயம்

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் உட்பட்ட தூதுக்குழுவினர் 2016 ஜுலை 17 முதல் 19 வரை சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டனர். இந்த விஜயத்தின்போது பிரதம அமைச்சர் சிங்கப்பூர் பிரதமர் லீ லூன், தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சர் மற்றும் இரு நாட்களினதும் உயர் ஸ்தானிகர்கள் உட்பட முக்கிய உத்தியோகத்தர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின்போது இலங்கையின் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்கு தேவையான அத்திவாரம் இடப்பட்டது. இந்த விஜயத்தின் ஊடாக இரு நாடுகளுக்கிடையிலும் இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளை மேலும் பலப்படுத்த முடியுமான வகையில் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவதற்கு இணக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

1) சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரியுடன் இணைந்து இலங்கையின் நிர்வாக சேவையின் தரத்தை உயர்த்தல்.

2) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மற்றும் சிவில் சேவைக் கல்லூரிக்கிடையே தற்போது செயற்படுத்தப்படும் பயிற்சி வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் விரிவுபடுத்தல் மற்றும் இலங்கை நீதிபதிகளின் சங்கம் மற்றும் சிவில் சேவைகள் கல்லூரிக்கிடையே தொடர்புகளை விரிவுபடுத்தல்.

3) இலங்கையில் பேரே வாவி சார்ந்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக சிங்கப்பூர் நதியை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.

4) சிங்கப்பூர் முதலீட்டாளர்களை இந்த நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

5) சிங்கப்பூர் அரசாங்கத்துடன் புதிய வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளல்

6) இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக, தொழிநுட்ப துறைகளில் அபிவிருத்தியை எற்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- முறையாக பாடசாலைக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் இலங்கை இளைஞர்களின் ஆற்றல் விருத்திக்காக 2016 ஆகஸ்ட் முதல் பயிற்சியை ஆரம்பிப்பதற்காக சிங்கப்பூரின் தகவல் தொழிநுட்ப கல்வி சேவை அமைப்புடன் தொழிநுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறைகளில் ஒத்துழைப்பு சம்பந்தமாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்.

- இலங்கையின் தகவல் தொழிநுட்பம் மற்றும் உபசரணை சேவைப் பிரிவுக்காக பயிற்சி நிறுவனமொன்றை தாபிப்பதற்காக சிங்கப்பூரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல்.

- வடமேல் மாகாண நகர அபிவிருத்திக்காக சிங்கப்பூரின் சர்வதேச வர்த்தக சபையுடன் புரிந்துணர்வு ஊப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்

- இலங்கை மத்திய மற்றும் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களுக்காக 02 பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.

- அரச சேவை பயிற்சிக்காக சிங்கப்பூரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் இலங்கை அரச சேவையில் சேவைத் தரம் மற்றும் சேவை விரிவாக்கத்தை உயர்த்துவதற்கு சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்.

- பாரியளவிலான கலாசார பரிமாற்றல் செயல்முறைகளை இலகுபடுத்துவதற்காக சிங்கப்பூரின் கலாசார, சமூக மற்றும் இளைஞர் விவகார அலுவல்கள் அமைச்சுடன் கலாசார துறைசார் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்






### 3.1.4. இந்தோனேசியாவுக்கான விஜயம் - 12 ஆவது உலக இஸ்லாமிய பொருளாதார மாநாடு

“பிராந்திய ஒத்துழைப்புக்காக தனியார் துறையின் பணிகள்” எனும் தொனிப்பொருளில் இம்முறை இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்ற 12 ஆவது உலக இஸ்லாமிய பொருளாதார மாநாட்டுக்காக இலங்கை பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் 2016 ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 03 ஆம் திகதி வரை இந்தோனேசியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இலங்கைப் பிரதம அமைச்சர் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட இந்தோனேசியாவின் ஜனாதிபதி ஜொக்கோ வ்தோதோ, நிதியமைச்சர் ஸ்ரீ முல்யானி இந்திரதீ சமுத்திர விவகார அமைச்சர் லுஹுூன் பின்சார் ஜன்ஜய்தான் போன்றோரை சந்தித்து இரு தரப்புக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அங்கு, இலங்கை அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் துரித அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு துணைபுரியும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இந்தோனேசியா மற்றும் இலங்கையின் வர்த்தக சபைகளிடையே ஒத்துழைப்பு நடவடிக்கையை ஏற்படுத்தும் முறையொன்றை தயாரித்தல் மற்றும் இந்தோனேசிய முதலீட்டாளர்களுக்குப் போன்றே இலங்கை முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுக்கான வாய்ப்பை விரிவு படுத்துவதற்கும் ஏற்கனவே இந்தோனேசியாவில் தேயிலை உட்பட பெருந்தோட்டத்துறையில் இலங்கை முதலீடு செய்துள்ளதனால் அவற்றை மேலும் விருத்தி செய்தல்.






### 3.1.5. சீனாவுக்கான விஜயம்

2016 ஆகஸ்ட் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையின் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் உட்பட்ட தூதுக்குழுவினர் சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டனர். அங்கு பிரதமர் உட்பட்ட தூதுக் குழுவினர் கைத்தொழில் பேட்டை, கொள்கலன் முனையங்கள், தொழிநுட்பப் பூங்கா, நிதி மையம் மற்றும் ஆக்கத்திறன் உற்பத்தி நிறுவனம் போன்ற பொருளாதார அபிவிருத்திக்கு துணைபுரியும் முக்கிய இடங்கள் அவதானிப்புக்குட்பட்டது.

இங்கு இலங்கை மற்றும் சீனாவுக்கிடையே நிலவும் இருதரப்புத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துதல் சம்பந்தமாக சீன அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பெரிய அளவிலான தொழில் முயற்சியாளர்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

அத்துடன் இந்த விஜயத்தின்போது இலங்கைக்கு உச்சளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு இரு நாடுகளுக்குமிடையே ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் இணக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

1) துறைமுக நகர அபிவிருத்தி திட்டம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் பெரு நகர அபிவிருத்தி திட்டம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி


2) சிறுநீரக நோயை பரீட்சிக்கும் நடமாடும் வாகனங்கள் திட்டம்

3) பாதுகாப்பான நீர் வழங்கல் தொழில்நுட்பம் சம்பந்தமாக ஒன்றிணைந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தை ஆரம்பித்தல்

4) தொழிற் கல்வித் துறையில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்காக எதிர்வரும் 05 வருடங்களுக்குள் பயிற்சிக்கான 2000 வாய்ப்புக்களை இலங்கைக்கு பெற்றுக்கொடுத்தல்.

5) புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
    - சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான ஒப்புவித்தல் ஒப்பந்தம்
    - முதலீடு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை விரிவான வகையில் செயற்படுத்தல் சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம்
    - தெற்கு அதிவேகப் பாதையின் நீட்சியை நிர்மாணிக்கும் நடவடிக்கைக்கான பக்கச்சார்பான கடனுதவி ஒப்பந்தம்
    - சீன அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையே ஒத்துழைப்பு அடிப்படையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- சீனாவின் தேசிய இயற்கை விஞ்ஞான அமைப்பு மற்றும் இலங்கையின் தேசிய விஞ்ஞான அமைப்புக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்








### 3.1.6. சிங்கப்பூருக்கான விஜயம் - இந்து சமுத்திர மாநாடு 2016

இந்திய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்துவதற்காக இலங்கையின் பிரதம அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இந்து சமுத்திர வலயத்தில் அமைந்திருக்கும் முக்கிய நாடுகளின் பங்கேற்புடன் 2016 செப்டெம்பர் 01, 02 ஆம் திகதிகளில் சிங்கப்பூரின் சங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் ஆரம்ப உரையை பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் நிகழ்த்தினார். மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கையூம், மலேசியாவின் பிரதிப் பிரதமர் கலாநிதி அகமட் சஹீட் ஹமீட் உட்பட பல அரசியல்வாதிகள், அறிஞர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

மாநாட்டினை இலங்கையின் கொள்கை ஆய்வு நிறுவனம், பங்களாதேஷின் சர்வதேச மூலோபாயங்கள் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் சர்வதேச கற்கைகளுக்கான ராஜரத்னம் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தின. இந்து சமுத்திரம் தொடர்பான பாதுகாப்பு, பொருளாதார, கலாசார மற்றும் சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடுதல் இந்த மாநாட்டை நடாத்துவதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பிரதமர கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களினால் இலங்கையின்அபிவிருத்திச் செயற் திட்டங்கள், வடக்கு மற்றும் கிழக்க மாகாணங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள், தென்னிந்திய மாநில அரசுகள் மற்றும் இலங்கைக்கிடையில் நெருங்கிய தொடர்புகளை கட்டியெழுப்பும் ஆற்றல் சம்பந்தமாக மற்றும் மிலேனியம் அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் உதவிகள் சம்பந்தமாகவும் மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டது.






### 3.1.7. நியூசிலாந்துக்கான விஜயம்

நியூசிலாந்துப் பிரதமரின் அழைப்பினை ஏற்று இலங்கையின் பிரதமர் 2016 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 03 ஆம் திகதி வரை நயூசிலாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். அந்த விஜயத்தின்போது கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு நியூசிலாந்துப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்கும், நியூசிலாந்தின் பிரதமதர் கௌரவ ஜோன் கீ அவர்கள், நிதி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தகம் போன்ற முக்கிய துறைகளுக்குப் பொறுப்பான நியூசிலாந்து அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் பல முன்னணி வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இரு நாடுகளினதும் பிரதம அமைச்சர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின்போது இரு நாடுகளிலும் தூதுவர் அலுவலகங்களை அமைப்பதற்கும், அதனூடாக இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை விருத்தி செய்துகொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கலப்பு பிரதிநிதித்துவத்துடன்கூடிய நியூசிலாந்து பாராளுமன்ற முறை மற்றும் தற்போது நியூசிலாந்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தேர்தல் முறை சம்பந்தமாகவும் இரு நாடுகளினதும் பிரதமர்கள் கலந்துரையாடினர்.

நியூசிலாந்து மற்றும் இலங்கைக்கிடையில் நிலவும் ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் இலங்கையில் கைத்தொழில் / பொருளாதார பிரிவுகளை முன்னேற்றுவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அவையாவன;

1) பால் உற்பத்திக் கைத்தொழில் அபிவிருத்திக்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்.
2) மீன்பிடி நடவடிக்கைகள் முகாமைத்துவம் சம்பந்தமாக உத்திகளைப் பயன்படுத்தல்.
3) திறைசேரியை மறுசீரமைத்தல், பொருளாதார, நிதி மற்றும் அரச தொழி முயற்சிகள் போன்ற பிரிவுகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள்.





### 3.1.8. இந்தியாவுக்கான விஜயம்

பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உட்பட்ட தூதுக் குழுவினர் 2016 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை இந்தியாவின் புதுடில்லிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது பிரதமர் அவர்கள் இந்திய ஜனாதிபதி, பிரதமர் உட்பட இந்திய அரசாங்கத்தின் சில அமைச்சர்களுடன் உத்தியோகபூர்வக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அந்தக் கலந்துரையாடல்களின்போது முக்கியமாக இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை, இந்திய உதவியுடனான வீடமைப்புத் திட்டம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ECTA), வடக்குப் பாதைகள் அபிவிருத்தி, சக்தி வளங்கள் உற்பத்தி மற்றும் திருகோணமலை எண்ணெய் சுத்திகரிப்பு சம்பந்தமாக கவனம் ஈர்க்கப்பட்டது.

இந்த விஜயத்தின்போது, இந்திய முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீட்டுக்காக ஊக்குவிப்பதற்கும், யாழ்ப்பாணம் - கொழும்பு, மன்னார் - திருகோணமலை மற்றும் திருகோணமலை - தம்புள்ளை போன்ற பாதை அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வழங்குவதற்கும் இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.





### 3.1.9. பெல்ஜியத்துக்கான விஜயம்

இலங்கையின் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2016 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பெல்ஜயத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். அங்கு அவர், பெல்ஜியத்தின் ஜனாதிபதி கௌரவ சார்ள்ஸ் மிச்செல், இளவரசர் லோரன்ஸ் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதானிகள் ஆகியோரைச் சந்தித்ததுடன், ஐரோப்பா சங்கத்தின் பிரதானிகளுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் முக்கிய நோக்கம் GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதாகும். அங்கு பிரதமர் அவர்கள் இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான புதிய திட்டங்களை விபரித்தார். ஐரோப்பா சங்கத்தின் முக்கிய ஊறுப்பினர்கள் GSP+ சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் சம்பந்தமாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு சாதகமான பதிலை அளித்தனர்.





### 3.2. இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்தல்

| இல. | திகதி | சந்தித்த அரச தலைவர்கள் |
|---|---|---|
| 01 | 2016.01.04 | ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் பிரதமர் கௌரவ டோனி பிளேயார் அவர்கள் |
| 02 | 2016.01.05 | பாகிஸ்தான் பிரதமர் அதிமேதகு நவாஷ் செரீப் அவர்கள் |
| 03 | 2016.01.05 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் முதலீட்டாளர் ஜோர்ஜ் சொரோஸ் அவர்கள் |
| 04 | 2016.01.07 | நோர்வே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பர்ஜ் பெண்ட்ரே அவர்கள் |
| 05 | 2016.01.07 | ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின், ஜோன் எப் கெனடி கற்கைப் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் சம்பந்தமான பேராசிரியர் ரிகாடோ ஹுஸ்மன் அவர்கள் மற்றும் அமெரிக்க பொருளியல் நிபுணர் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜோசப் ஸ்டிக்லிஸ் அவர்கள். |
| 06 | 2016.01.12 | இந்திய வெளிவிவகார செயலாளர் அதிமேதகு கலாநிதி எஸ் ஜெயசங்கர் அவர்கள் |
| 07 | 2016.01.14 | ஐக்கிய இராச்சியத்தின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ ஹியுகோ ஸ்வயர் அவர்கள் |
| 08 | 2016.01.18 | கொரிய எக்சிம் வங்கியின் தலைவர் கலாநிதி லீ டுக் - ஹுன் அவர்கள் |
| 09 | 2016.01.28 | அவுஸ்திரேலிய அரசியல் மூலோபாயங்கள் தொடர்பான கலாநிதி சேர் லின்டன் கொஸ்ப்ரீ அவர்கள் |
| 10 | 2016.02.05 | வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாடுகளில் இந்திய அலுவல்களுக்கப் பொறுப்பான அமைச்சர் கௌரவ ஸ்ரீமதி சுஷ்மா ஸ்வராஜ் அம்மையார் |
| 11 | 2016.02.05 | சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு |
| 12 | 2016.02.08 | இலங்கை நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் கௌரவ ஜெப்ரி வென் - ஓர்டன் அவர்கள் மற்றும் மோட்டேன் மெசர்மிஸ்ட் அவர்கள் |
| 13 | 2016.02.09 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் அதிமேதகு சயிட் ராட் அல்ஹுசேன் அவர்கள் |
| 14 | 2016.02.23 | ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டக்கஹிக்கோ நக்காயோ அவர்கள் |
| 15 | 2016.02.24 | நியூசிலாந்து பிரதமர் கௌரவ ஜோன் கீ அவர்கள் |
| 16 | 2016.02.25 | ஈரான் இஸ்லாமிய குடியரசின் எரிசக்தி அமைச்சர் கௌரவ சிச்சியன் ஹமீட் அவர்கள் |

| இல. | திகதி | சந்தித்த அரச தலைவர்கள் |
|---|---|---|
| 17 | 2016.03.01 | அமெரிக்க ஐக்கிய குடியரசின் உப செயலாளர் பெட்ரிக் எப். கெனடி அவர்கள் |
| 18 | 2016.03.08 | பாகிஸ்தான் ஜனாதிபதி அதிமேதகு மைமூன் ஹுசேன் அவர்கள் |
| 19 | 2016.03.09 | மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபனத்தின் உப தலைவர் பெத் டிரிடெர் அவர்கள் |
| 20 | 2016.03.10 | தாய்லாந்தின் பிரதிப் பிரதமர் அதிமேதகு சொம்கிட் ஜட்டுஸ்ரீபிட்டக் அவர்கள் |
| 21 | 2016.03.16 | சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஐரோப்பிய சங்கத்தின் ஆணையாளர் நெவான் மிமிக்கா அவர்கள் உட்பட்ட தூதுக் குழுவினர். |
| 22 | 2016.04.22 | சார்க் செயலாளர் நாயகம் அதிமேதகு அர்ஜுன் பீ தாப்பா அவர்கள் |
| 23 | 2016.04.25 | சுவீடன் வெளி விவகார அமைச்சர் அதிமேதகு மார்கொட் வொல்ஸ்ட்ரம் அம்மையார் |
| 24 | 2016.04.27 | தாய்லாந்தின் அரச பாதுகாப்பு இராணுவத் தலைவர் ஜெனரல் சோமாய் கலொட்டிரா அவர்கள் |
| 25 | 2016.05.04 | மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அதிமேதகு துன்யா மைமூன் அம்மையார் |
| 26 | 2016.05.16 | ஜேர்மன் பொருளாதார அலுவல்கள் மற்றும் எரிசக்தி பாராளுமன்ற இராஜாங்க செயலாளர் உவே பெக்மெயர் அவர்கள் |
| 27 | 2016.05.18 | ஜப்பான் பிரதமரின் விசேட ஆலோசகர் ஹிரோத்தோ இசுமி அவர்கள் |
| 28 | 2016.05.18 | ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்க செயலாளர் கௌரவ ரிச்சட் ஆமிடேஜ் அவர்கள் |
| 29 | 2016.05.19 | உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையினர் |
| 30 | 2016.05.27 | மலேசிய விசேட அரச பிரதிநிதி கௌரவ டுன் மூசா ஹிதாம் அவர்கள் |
| 31 | 2016.06.06 | பிரித்தானிய இராஜ தந்திர சேவைகள் பிரதானி சேர் சய்மன் மெக்டொனல்ட் அவர்கள் |
| 32 | 2016.06.15 | துருக்கி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ மெவுலட் கவுசோக்லு அவர்கள் |
| 33 | 2016.07.09 | சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ வெங்யி அவர்கள் |
| 34 | 2016.07.12 | ஈரான் இஸ்லாமிய குடியரசு ஸ்தாபகரின் பேரன் மற்றும் பிரசித்தி பெற்ற இஸ்லாமிய மத போதகர் அதிமேதகு ஆயதுல்லா செயிட் ஹஸன் கொமெய்னி அவர்கள் |
| 35 | 2017.07.03 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் அம்மையார் |

| இல. | திகதி | சந்தித்த அரச தலைவர்கள் |
|---|---|---|
| 36 | 2017.07.21 | உலக பொருளாதார ஒன்றியத்தின் உத்தியோகத்தர் கலாநிதி பிலிப் ரொஸ்லர் அவர்கள் மற்றும் விராஜ் மேத்தா அவர்கள் |
| 37 | 206.07.22 | மலேசிய பிரதிப் பிரதமர் கௌரவ அகமட் சஹீட் பின் ஹமீட் அவர்கள் |
| 38 | 2016.07.27 | ஜப்பான் சர்வதேச அலுவல்கள் உப பிரதமர் கௌரவ ஹிரோபியும் கடாசே அவர்கள் |
| 39 | 2016.07.28 | கனேடிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஸ்டெபான் டியோன் அவர்கள் |
| 40 | 2016.08.08 | பாகிஸ்தான் விமானப் படை பதவிநிலை தலைமை அதிகாரி எயார் சீப் மார்ஷல் சொஹேல் அமான் அவர்கள் |
| 41 | 2016.08.12 | நோர்வே பிரதமர் கௌரவ அர்னா சொல்பர்க் அம்மையார் |
| 42 | 2016.08.31 | ஐ.நா.அமைப்பின் செயலாளர் நாயகம் அதிமேதகு பென்கீ மூன் அவர்கள் |
| 43 | 2016.09.26 | இந்திய வாணிப மற்றும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஸ்ரீமதி நிர்மலா சீதாராமன் அம்மையார் |
| 44 | 2016.10.07 | சுவிட்சர்லாந்தின் தேசிய சபையின் சபாநாயகர் கௌரவ கிரிஸ்டா மார்க்வலடர் அம்மையார் |
| 45 | 2016.10.10 | ஜப்பான் பிரதமரின் விசேட ஆலோசகர் திரு.ஹிரோத்தோ இசுமி |
| 46 | 2016.10.12 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் உப பொதுச் செயலாளர் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் சம்பந்தமான நிர்வாகக் குழுவின் (ESCAP) நிறைவேற்றுச் செயலாளர் கலாநிதி சம்சர் அக்தார் அவர்கள். |
| 47 | 2016.10.12 | ஹங்கேரிய வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ பீட்டர் சிஜாட்டோ அவர்கள் |
| 48 | 2016.10.23 | இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர் கௌரவ கலாநிதி எஸ் ஜெய்சங்கர் அவர்கள். |
| 49 | 2016.10.26 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் சமாதான செயலணியின் பணிப்பாளர் திருமதி கெரி ஹெஸ்லர் ரெடெல்ட் |
| 50 | 2016.10.31 | திருமதி ஜின் லெம்பர்ட் அவர்களின் தலையிலான ஐரோப்பிய சங்கப் பாராளுமன்றத்தின் தூதுக் குழுவினர். |
| 51 | 2016.11.27 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் பசுபிக் செயலணியின் கட்டளைத் தளபதி அத்மிரால் திரு.ஹெரி பீ ஹெரிஸ் |
| 52 | 2016.12.12 | தஜிகிஸ்தான் ஜனாதிபதி அதிமேதகு எமொரலி ரஹ்மான் அவர்கள். |

# 04. தேசிய நல்லிணக்கம், சமூக நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள்

## 4.1. தேசிய நல்லிணக்கம்

மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற குரூர யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் இலங்கையர்களான எம்மால் இதுவரை உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. எனவே, இலங்கையின் சகல மத மற்றும் இனக் குழுக்களுடனும் கலந்துரையாடி தேசிய சட்ட வரையறைக்குள் பதில் அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

சகல இனத்தவரும் நியாயமான முறையில் வாழ முடியுமான நீதியான சமூகமொன்றினை தோற்றுவிப்பதற்கும் புதிய அரசாங்கம் தாமதமின்றி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், இனங்களுக்கிடையிலான சகவாழ்வை விருத்தி செய்யுமுகமாக அனைத்து மதங்களினதும் ஒரு பண்டிகையை தேசிய பண்டிகையாக கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் கொண்டாடப்படுவது இதன் ஒரு கட்டமாகும்.

அதற்கமைய, கௌரவ ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சரின் தலைமையில் கொழும்பு நவம் பெரஹராவும், வெசாக் போயா தினத்தை முன்னிட்டு கொழும்பு ஹுணுபிட்டிய கங்காராமை விஹாரையை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட “புத்த ரஷ்மி” தேசிய வெசாக் பண்டிகையும், முஸ்லிம்களின் கடமைகளில் ஒன்றான ரமழான் நோன்பு காலத்தில் நோன்பு திறக்கும் நிகழ்வான “இப்தார்” வைபவமும் 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது.

மேலும், பிரதம அமைச்சர் அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தின்போது வாக்குறுதியளித்தன் படி யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரிக்கு 26 ஆசனங்களைக் கொண்ட பஸ் வண்டியொன்றை வழங்கும் நடவடிக்கை கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதுடன், மகளிர் விவகார அமைச்சுடன் இணைந்து கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் பெண்களுக்காக அமைக்கப்பட்ட தேசிய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மீது நிதமும் கவனம் செலுத்தப்படுகின்றது.






### 4.1.1 நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இன்னுமொரு நடவடிக்கையாக பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் முன்மொழிவுக்கமைய 2015 டிசம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகரிக்கப்பட்டதற்கிணங்க “ நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்” தாபிக்கப்பட்டதுடன், அதன் அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1) நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமான தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் கருத்தரங்குகளை ஒருங்கிணைத்தல்

2) காணாமற்போனோர் பற்றிய அலுவலகம், உண்மைத் தகவல்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, தவறைத் திருத்திக்கொள்ளல் நடவடிக்கை அலுவலகம், விசேட நீதிமன்றங்கள் சபை மற்றும் ஏனைய தொடர்புடைய நல்லிணக்கப் பொறிமுறைகளை தாபிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கால அட்டவணையைத் தயாரித்தல்

3) இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு ஐக்கிய நாடுகள் அமைப்பின் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் உட்பட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவரல்.

4) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலக அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றம் பற்றிய பின்னூட்டல் நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைப்பு

5) நீதியின் ஆதிக்கம், மனித உரிமைகள், நிர்வாகம் மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு போன்றவற்றை பலப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

அத்துடன், இந்த ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் தகவல்களை அறிந்துகொள்வதற்கான இணையத்தளமொன்று (www.scrm.gov.lk) யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்ததுடன், காணாமற்போனோர் பற்றிய அலுவலகமொன்றும் தாபிக்கப்பட்டது. சட்ட உருவாக்கம் உட்பட காணாமற்போனோர் சம்பந்தமான அலுவலகமொன்றை தாபிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்ட மூலத்தை சட்டமாக 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற் போனோர் சம்பந்தமான அலுவலகம் (தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் அலுவல்களை மேற்கொள்ளல்) சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கௌரவ பிரதம அமைச்சரால் நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமான செயலகத்தின் கீழ் நல்லிணக்கப் பொறிமுறையின் நிமித்தம் செயலணியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தின் ஊடாக 2016 ஆம் ஆண்டில் பொது மக்களை அறிவுறுத்துவதற்கும் அவர்களது கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒருங்கிணைப்பின் ஊடாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

45

இது தவிர இந்த நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு தூதுக் குழுக்களில் உயர் நிலை உத்தியோகத்தர்களுடனும் ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளின் தூதுவர்களுடனும் புலம்பெயர்ந்தோர் சம்பந்தமான சர்வதேச அமைப்பின் (IOM) பிரதானிகளுடனும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளருடனும் புலம்பெயர் நியாயப் பொறிமுறை சம்பந்தமாகவும் அதற்காக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான உதவிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமாக பாதுகாப்பு பிரிவு மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கான கலந்துரையாடலொன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளரின் ஒருங்கிணைப்புடன் கொழும்பு, காலி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடாத்தப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.2. அரசியல் யாப்பு சீர்திருத்தச் செயற்பாடுகள் சம்பந்தமான பொது மக்கள் பிரநிதித்துவக் குழு

அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமான பொது மக்கள் பிரதிநிதித்துவக் குழு உருவாக்கப்பட்டது. அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களை வினவி அக்கருத்துக்களை குழுவின் சிபாரிசுடன் அரசியலமைப்புச் சபையிடம் ஒப்படைப்பதே இக் குழுவின் பொறுப்பாகும்.

இக் குழு சட்டத்தரணி லால் விஜேநாயக்க அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டதுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக வரிவுரையாளர்கள், ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட சட்டத்தரணிகள், அரசயில் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரை உள்ளடக்கியதாக இருந்தது.

பொது மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக இக்குழு 25 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 02 நாட்கள் வீதமும் கொழும்பு மாவட்டத்தில் 08 நாட்களும் அமர்வுகளை நடாத்தியதுடன் கீழ் குறிப்பிடப்படும் 20 தலைப்புக்களின் கீழ் எழுத்து மற்றும் வாய் மூலமாக தமது கருத்துக்களை முன்வைக்குமாறு பொது மக்களிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது.

1) அரசின் தன்மை.
2) ஆட்சி முறையின் தன்மை (ஜனாதிபதி முறைமை ∴ பாராளுமன்ற முறைமை)
3) அரசியல் யாப்பின் அடிப்படைக் கட்டமைப்பு.
4) பிரஜாவுரிமை, சமயம், அடிப்படை உரிமைகள், மொழியுரிமை அரச கொள்கைகளை செயற்படுத்துவதற்கான கோட்பாடுகள்
5) சட்டவாக்கச் சபை (ஒரு சபை / இரு சபை)
6) அரசியல் யாப்பின் அல்லது பாராளுமன்றத்தின் மேலாதிக்கம்.
7) சட்டம், நிர்வாகம், நீதித் துறைகளிடையே அதிகாரப் பகிர்வு
8) நீதித்துறையின் மேலாதிக்கமும் கட்டமைப்பும்
9) அரசியலமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்கள்
10) அதிகாரத்தில் பங்களிப்பு செலுத்தல், அதிகாரப் பகிர்வு, மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள்
11) மத்தியில் அதிகாரப் பங்கீடு
12) அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்கள்
13) அரச சேவை
14) தேர்தல் சீர்திருத்தங்கள்.
15) சட்டங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் ஆய்வு
16) பாராளுமன்ற முறைமையின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்கள்
17) பாராளுமன்ற முறைமையின் கீழ் ஜனாதிபதியை நியமித்தல்

18) பொதுமக்கள் பாதுகாப்பு

19) நிதிப் பயன்பாடு

20) வேறு விடயங்கள்

சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், தொழில்வல்லுனர்கள், சுயாதீனக் குழுக்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி 2216 பேர் குழுவிடம் தமது கருத்துக்களை முன்வைத்தனர். அது தவிர, மதத் தலைவர்கள், விவசாயிகள், கற்றறிந்தோர், தொழில்வல்லுனர்கள் மற்றும் மாணவர்களைப் பரதிநிதித்துவப்படுத்தி 3000 இற்கும் மேற்பட்ட எழுத்து மூலமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக தமது பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் பல்கலைக்கழக நூலகங்கள், பொது நூலகங்கள், முக்கிய அரச நிறுவனங்கள், உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அது தவிர நேரடிப் பிரவேசத்திற்காக (Online Access)பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மும்மொழிகளிலும் இந்த அறிக்ரக பிரசுரிக்கப்பட்டுள்ளது.



## 4.2 சமூக சேவைகள்

பிரதம அமைச்சர் ரணில் விக்மசிங்க அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் 2016 ஆம் ஆண்டில் கீழ்வரும் சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 4.2.1. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு நிகழ்வைக் கொண்டாடுதல்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் புத்தாண்டு நிகழ்வு, 2016 ஏப்ரல் 25 ஆந் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் களப் படைத் தலைமையகத்தில் பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அனைத்து பணியாட் தொகுதியினரும், அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் உள்ளிட்ட 600 பேருக்கும் அதிகமானோர் பங்குபற்றினர். குடும்ப அங்கத்தவர்களின் திறமைகள், பரஸ்பர நட்புறவு மற்றும் குழு உணர்வு என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் குழு மற்றும் தனிநபர் போட்டிகள் பல அங்கே இடம்பெற்றன.






### 4.2.2. இரத்த தான நிகழ்ச்சி

பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் தேசிய இரத்தப் பறிமாற்றல் சேவை என்பன ஒன்றிணைந்து நடாத்திய இரத்த தானம் வழங்கும் நிகழ்வொன்று 2016.04.26 ஆந் திகதி பிரதம அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் நூறு பேர் அளவில் இரத்த தானம் வழங்கி அதில் பங்களிப்புச் செலுத்தினர்.

### 4.2.3. மீரிகமை முதியோர் இல்லத்தைப் புனரமைத்தல்

பிரதம அமைச்சர் அலுவலகம், மயுர அம்மான் நலன்புரிச் சங்கம் என்பவற்றின் ஒன்றிணைவின் மூலம் சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படும் "செத் செவன" முதியோர் இல்லம் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஓர் முதியோர் பெண்கள் விடுதி முழுமையாக புனரமைப்புச் செய்யப்பட்டதுடன், அதில் நிலத்திற்கு பீங்கான கற்கள் பிடித்தல், புதிய கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புக்கள் வழங்கல் என்பனவும் உள்ளடங்குகின்றன. புனரமைப்புச் செய்யப்பட்ட விடுதி, பிரதம அமைச்சரின் செயலாளர் ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க அவர்களின் தலைமையில் 2016 மே மாதம் 07 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், 100 பழக் கன்றுகள் நடும் நிகழ்வும் அப்போது இடம்பெற்றது.






## 4.3. சமய நிகழ்வுகள்

புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்பு பௌத்த, இந்து, இஸலாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களுக்கிடையே சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்து சமயங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஓர் பிரதான சமய நிகழ்வொன்றை பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய ரீதியாக கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 4.3.1. கொழும்பு நவம் மகா பெரஹரா

ஹுனுப்பிட்டி, கங்காராம விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகம் என்பவற்றினால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கொழும்பு நவம் மகா பெரஹரா 2016 பெப்ரவரி மாதம் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் மிகவும் விமர்சையாக, கொழும்பு நகர் முழுவதும் ஒளி பரப்பிய வண்ணம் வீதி வலம் வந்தது.

75 யானைகள் பங்குபற்றி இந்த நவம் பெரஹராவினை அலங்கரித்ததுடன், மேலநாட்டு, கீழ்நாட்டு மற்றும் சப்ரகமுவ கலை சம்பிரதாயங்களுக்குரிய நாட்டிய நிகழ்வுகள் மற்றும் ஏனைய அலங்காரம் மிக்க பல நாட்டியங்களில் கிட்டத்தட்ட 7000 கலைஞர்கள் பங்குபற்றினர்.

இம்முறை கொழும்பு நவம் பெரஹராவின் ஆரம்ப தினமான 2016 பெப்ரவரி மாதம் 21 ஆந் திகதி தாதுப் பேழையை மங்கள எனும் கொம்பன் யானை மீது வைத்து பெரஹரா நிகழ்வுகளை ஆரம்பிக்கும் வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பங்குபற்றியதுடன், பெரஹராவின் இரண்டாம் தினமான பெப்ரவரி 22 ஆந் திகதி தாதுப் பேழையை மங்கள எனும் கொம்பன் யானை மீது வைத்துபெரஹரா நிகழ்வுகளை ஆரம்பிக்கும் வைபவம் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பெரஹராவைப் பார்வையிட இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்திருந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிக எண்ணிக்கையானோருக்குப் பெரஹராவைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறே இந்தப் பெரஹரா உள்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை உலகிற்கு எடுத்துக் கூறவும், அந்தக் கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாய் அமைந்தது.

### 4.3.2. அலரி மாளிகையில் இடம்பெற்ற ஆயிரம் பிக்குமாருக்கு புண்ணிய தானம் வழங்கும் வைபவம்

பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யபப்பட்ட புண்ணிய தானம் வழங்கும் வைபவம் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் பங்குபற்றலுடன் 2016 மார்ச் மாதம் 08 ஆந் திகதி அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த புண்ணிய தானம் வழங்கல் நிகழ்வில் மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகா நாயக்க தேர்கள், அனு நாயக்க தேரர்கள், சங்க நாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இதன்போது அனைத்து பிக்குமாருக்கும் பணம் உட்பட ஏனைய தானப் பொருட்கள் வழங்கப்பட்டன.









### 4.3.3. புனித தாதுப் பொருட்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் காட்சிப்படுத்தல்

பாகிஸ்தான் பிரதம அமைச்சர் கௌரவ நவாஸ் ஷரீப் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது இஸ்லாமாபாத் நகரத்தில் அமைந்துள்ள தக்ஷிலா அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புனித தாதுப் பொருட்களை இலங்கையில் காட்சிப்படுத்துவதற்கென வழங்குவதாக பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்மசிங்க அவர்களுக்கு வழங்கிய உடன்பாட்டுக்கு ஏற்ப அந்த புனித தாதுப் பொருட்கள்2016 மே மாதம் 19 ஆந் திகதி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த புனித தாதுப் பொருட்கள்,2016 மே மாதம் 21 ஆந் திகதி முதல் மே மாதம் 25 ஆந் திகதி வரை அலரி மாளிகையிலும், மே மாதம் 26 முதல் ஜுன் மாதம் 25 ஆந் திகதி வரை நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள 17 விகாரைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டதுடன்,புனித தாதுப் பொருட்களைத் தரிசிப்பதற்கு இலட்சக்கணக்கானோர் வருகை தந்தனர்.

காட்சிப்படுத்தலின் இறுதியில் அதாவது 2016 ஜுன் 26 ஆந் திகதி பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களினால் தங்கப் பேழையில் இப்புனித தாதுப் பொருட்கள் வைக்கப்பட்டு தக்ஷிலா அருங்காட்சியகத்தின் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பிரதம அமைச்சர் அலுவலகம், புத்த சாசன அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து இந்த புனித தாதுப் பொருட்கள் காட்சிப்படுத்தலை ஏற்பாடு செய்திருந்தன.

பாகிஸ்தானிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித தாதுப் பொருட்கள் காட்சிப்படுத்தலுடன் இணைந்தவாறு நீலகிரி தாதுப் பொருட்கள் உள்ளிட்ட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் கண்காட்சியும் 2016 மே மாதம் 21 ஆந் திகதி முதல் 25 ஆந் திகதி வரை அலரி மாளிகை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றதுடன், அக்கண்காட்சி 2016 மே மாதம் 21 ஆந் திகதி (வெசக் போயா தினம்) அன்று அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சிக்குத் தொல்பொருளியல் திணைக்களம், மத்திய கலாச்சார நிதியம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம், தேசிய சுவடிக் கூடத் திணைக்களம், பௌத்த அலுவல்கள் திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை, கைவிணைப் பொருட்கள் சபை (லக்சல), தேசிய அலங்கா மத்திய நிலையம், ஆயர்வேதத் திணைக்களம், நுண்கலை கற்கைகள் பல்பலைக்கழகம், மேல், மத்திய, ஊவா, தென், வடமேல், சம்பரகமுவ மாகாண சபைகளின் கலாச்சார அமைச்சுக்கள் என்பவற்றினால் காட்சிப் பொருட்கள் வழங்கப்பட்டன.





### 4.3.4. புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம்

கங்காராமை விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுலவகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புத்த ரஷ்மி வெசாக் வைபவம் 2016 மே 21 ஆந் திகதி முதல் 25 ஆந் திகதி வரை கங்காராமை விகாரை, அலரி மாளிகை, பேரே வாவி என்பவற்றைச் அண்டிய பகுதிகளில் வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது.


அவ்வாறே இந்த வெசாக் வலயம் பேரே வாவியின் தண்ணீர் மேற்பரப்பு மீது நிர்மாணிக்கப்பட்ட விசேட வெசாக் நிர்மாணங்கள், பௌத்த பக்தி கீத அரங்கேற்றம், பௌத்த நாடக அரங்கேற்றம், பௌத்த ஜாதகக் கதைகள் ஊடாக முன்வைக்கப்பட் வீதி நாட்டியங்கள்,பொம்மலாட்டம், வெசாக் தொரண போன்ற பல அம்சங்கள் நிறைந்த பாரிய சமய, கலாச்சார நிகழ்வாக அமைந்தது.

புத்த ரஷ்மி வெசாக் வலயத்தைக் காண்பதற்காக இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிக எண்ணிக்கையானோருக்கு இந்த வெசாக் வலயத்தைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது தேசிய படைப்பாளிகளின் திறமைகளை உலகுக்கு எடுத்துக் கூறவும், தேசிய கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாய் அமைந்தது.









### 4.3.5. இப்தார் வைபவம்

இஸ்லாமிய பக்தர்கள் மிகுந்த பக்தியுடன் கொண்டாடும் இப்தார் நிகழ்வு இஸ்லாமிய பக்தர்கள், மௌலவிமார் 1500 க்கு மேற்பட்டோரின் பங்குபற்றலுடன் 2016 ஜூன் மாதம் 30 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.









**4.3.6. கொள்ளுபிட்டி வாலுகாராம மகா விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா**

மத சகவாழ்வின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு கொள்ளுபிட்டி வாலுக்காராம மகா விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா 53 ஆவது தடவையாகவும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் 2016 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்றது.

அதிமேதகு ஜனாதிபதியவர்களின் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கோலாகலமான முறையில் நடாத்தப்பட்ட இந்த பெரஹரா வைபவம் பாரம்பரிய தேசிய நடன சம்பிரதாயத்தை எடுத்தியம்பும் மேல் நாட்டு, கீழ் நாட்டு நடனங்களாலும், அலங்கரிக்கப்பட்ட ஏராளமான யானைகளாலும் மேலும் மெருகூட்டப்பட்டதாக இருந்தது.

அத்துடன், இந்த பெரஹரா வைபவத்தைக் கண்டு களிப்பதற்காக ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கலந்து கொண்டதுடன் தொலைக்காட்சி அலைவரிசை ஊடாகவும் அநேகமானோருக்கு பெரஹராவைக் கண்டு களிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது.





### 4.3.7. தீபாவளிப் பண்டிகை

பிரதமர் அலுவலகம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தீபாவளி தேசியப் பண்டிகை 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமரின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்துக்களின் புது வருடத்தை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் இந்தப் பண்டிகையின் நோக்கம் இருளை நீக்கி ஒளியை ஏற்படுத்துவதும் தீமையை ஒழித்து நன்மையை நிலைத்தோங்கச் செய்வதுமாகும்.

இந்த வைபவத்தின்போது கடவுள் விஷ்ணுவுக்காக இந்து மத குருமார்களால் பூஜை நடாத்தப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களால் கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.





# 05. பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

## 5.1. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பின்னூட்டலை மேற்கொள்ளல்

பல வருடங்களாக பொது மக்களுக்குத் தீர்த்துக்கொள்ள முடியாதிருந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் கௌரவ பிரதமருக்கு அனுப்பிவைக்கப்படும் கடிதங்கள் நாளாந்தம் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கின்றன.

அதற்கமைய,இவ்வாறு கிடைக்கப்பெறும் பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பொது மக்கள் தொடர்பு பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ள பொது மக்கள் முறைப்பாடுகள் /குறைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்த முடியும்.

- காணிப் பிரச்சினைகள்
- வீட்டுப் பிரச்சினைகள்
- வழக்குத் தீர்ப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள்
- நிவாரணங்கள் / சீவிப்பதற்கான நட்டஈடு கோரல்கள்
- பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்து கொள்வதற்கான கோரிக்கை
- தொழில் பிரச்சினைகள்
  - வேலைவாய்ப்புக் கோரிக்கைகள்
  - மீண்டும் தொழிலில் அமர்த்துமாறு கோருதல்
  - இடமாற்றங்கள்
- பொது வசதிகள்
  - வீதி நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு
  - குழாய் நீர், மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை
- முறைகேடுகள்
  - பொலிஸ் திணைக்களத்திற்கு எதிரான முறைப்பாடுகள்
  - ஊழல் மற்றும் மோசடி
  - நிறுவனத் தலைவர்கள் நியமனத்தில் முறைகேடுகள்
- அரசியல் பழிவாங்கல்கள்


2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள்கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | மாதம் | ஒரு மாதத்தில் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட பதில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஜனவரி | 4,144 | 3,718 |
| 02 | பெப்ரவரி | 6,903 | 6,768 |
| 03 | மார்ச் | 5,360 | 5,024 |
| 04 | ஏப்ரல் | 2,860 | 2,674 |
| 05 | மே | 2,971 | 2,080 |
| 06 | ஜூன் | 3,323 | 2,885 |
| 07 | ஜூலை | 3,343 | 2,627 |
| 08 | ஆகஸ்ட் | 3,674 | 2,869 |
| 09 | செப்டெம்பர் | 3,419 | 3,006 |
| 10 | ஒக்டோபர் | 5,326 | 4,973 |
| 11 | நவம்பர் | 3,648 | 3,123 |
| 12 | டிசம்பர் | 3,844 | 3,564 |
| | **மொத்தம்** | **48,815** | **43,311** |

இந்த முறைப்பாடுகள் மற்றும் குறைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் துரிதமாக கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் /அதிகாரிகளுக்கு அனுப்பப்படுவதுடன் அது தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- அமைச்சுக்களின் செயலாளர்கள்
- மாவட்டச் செயலாளர்கள்
- திணைக்களத் தலைவர்கள்
- கூட்டுத்தாபனங்கள்/கம்பனிகள்/நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்.
- பிரதேச செயலாளர்கள்
- உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர்கள்

## 5.2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்.



# 06. பாராளுமன்ற மற்றும் சட்டரீதியான அலுவல்கள்

## 6.1. பாராளுமன்ற அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான ஓர் பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 6.1.1. அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல்

- **அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள்**

2016 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை 122 அமைச்சரவை நிருபங்களும் 37 அமைச்சரவைக் குறிப்புக்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில், பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்தல் மற்றும் அவை தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில்களை வழங்கல்**

பிரதம அமைச்சர் அவர்களினால் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஏற்புடையனவாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் மேற்குறித்த காலப்பகுதியினுள் கேட்கப்பட்ட வாய்மூலமான வினாக்களில் 66 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் விடயப்பரப்பின் கீழ் வரும் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு போன்றே பாதுகாப்பமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட வாய்மூலமான வினாக்கள் 30 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விடயப்பரப்பிற்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக வாய்மூலமான வினாக்கள் 36 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட வினாக்கள் 39 க்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன. அதே போன்று கௌரவ பிரதம அமைச்சர் அவர்களிடம் வினாத் தொடுக்கும் சந்தர்ப்பத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் மிக்க கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக அனைத்து மாதங்களிலும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் வாய்மூலமான வினாக்கள் 04 க்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய இக்காலப்பகுதியினுள் வாய்மூலமான வினாக்கள் 44 க்குப் பதில்கள் வரையப்பட்டுள்ளன.

### 6.1.2. பாராளுமன்ற அறிக்கைகளை சபைக்கு முன்வைத்தல்

ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக வருடாந்த அறிக்கைகள், செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் 22 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

- **வருடாந்த அறிக்கைகள்**

1. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி – 2010 மற்றும் 2014
2. தேசிய பொலிஸ் ஆணைக்குழு – 2013
3. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு – 2012 மற்றும் 2014
4. ரணவிரு சேவா அதிகார சபை - 2012 மற்றும் 2013
5. நிதி ஆணைக்குழு – 2014
6. தேசிய கல்வி ஆணைக்குழு – 2013
7. அரச சேவைகள் ஆணைக்குழு – 2015
8. மத்திய சுற்றாடல் அதிகார சபை – 2014
9. நிர்வாக மேன்முறையீட்டு நியாய அதிகார சபை -2012, 2013 மற்றும் 2014

- **செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள்**

1. இலங்கை கடற் படை – 2014
2. இலங்கை விமானப் படை – 2014
3. அரச சேவைகள் ஆணைக்குழு - 2015
4. தேர்தல்கள் ஆணைக்குழு - 2015
5. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் திணைக்களம்

- **ஏனையவை**

1. 2016 ஆம் நிதியாண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் விதப்புரைகள் - 01
2. இலங்கை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கை – 2014

## 6.2. சட்டரீதியான அலுவல்கள்

பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக சட்ட வரைவுகளை ஆரம்பமாகத் தயாரிப்பது தொடக்கம் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேறுவது வரையான ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைவாக, 2016.01.01 முதல் 2016.09.30 வரையான காலப்பகுதியினுள் கீழ்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காணாமற் போன ஆட்கள தொடர்பான அலுவலகத்தை தாபித்தல், நிர்வாக ரீதியான மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பான சட்ட வரைவினைப் புதிய சட்டமாக நிறைவேற்றும் வரையான ஒருங்கிணைப்புப் பணிகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- அதே போன்று இப்பிரிவினால் கீழுள்ளவாறு அபிவிருத்தி, காணி முகாமைத்துவம், வெளிநாட்டு நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் போன்றே அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பணிகள் தொடர்பாகவும் புதிய சட்டங்களை வரைவு செய்தல் மற்றும் காணப்படும் சட்டங்களைக் காலத்துக்கு ஏற்றவாறு திருத்தியமைத்தல் என்பவற்றுக்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1) காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
2) அரச காணிகள் வங்கிச் சட்டம்
3) பலவந்தமாக காணாமற் போகச் செய்வதிலிருந்து அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச இணக்கச் சட்டம்
4) அந்நியச் செலாவணிச் சட்டம்
5) தேசிய கணக்காய்வுச் சட்டம்
6) அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
7) மூலதன இலாப வரிச் சட்டத்தை அறிமுகப்படுத்தல்
8) மேல் மாகாண பெருநகர வலய அபிவிருத்திச் சட்டம்
9) 2002 02 ஆம் இலக்கங் கொண்ட சக்தி வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தினை திருத்தியமைத்தல்
10) 2007 7 ஆம் இலக்கங் கொண்ட கம்பனிச் சட்டத்தினைத் திருத்தியமைத்தல்.
11) அமைச்சர்களுக்கு மற்றும் அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களுக்குப் பணிகளை ஒப்படைக்கும் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டம்

12) அதிகார ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்கள்) (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

13) முதலீடுகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

- இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்திற்கு பிரேரணைகளை நிறைவேற்றுவதற்காக சமர்ப்பிப்பதுடன், 2016.01.01 முதல் 2016.09.30 வரை கீழுள்ள பிரேரணைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) தேர்தலொன்றின்போது அல்லது சர்வஜன வாக்கெடுப்பொன்றின்போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள்.

(ii) இலஞ்சம் மறறும் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றினைத் திருத்தியமைத்தல்.

(iii) சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் ஊதியம் மற்றும் ஏனைய படிகள்

அதே போன்று பிரதம அமைச்சர் அவர்களை பிரதிவாதியாக ஆக்கி உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

# 07. மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

## 7.1. மனித வளங்கள் அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்து அதனூடாக அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க, பயன்மிக்க மற்றும் தரமான வகையில் மேற்கொள்வதற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். அதற்கமைய, 2016.01.01 முதல் 2016.12.31 வரையிலான காலப் பகுதிக்குள் வழங்கப்பட்டுள்ள தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாட நெறிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- **தேசிய பயிற்சித் திட்டங்கள் மற்றும் பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள்**

| இல. | பாடநெறியின் பெயர் | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் கால எல்லை | கலந்து கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய செயலமர்வு | திறன் அபிவிருத்தி நிதியம் | 2016.02.06 - 01 நாள் | 42 |
| 02 | செயன்முறை மனித வளங்கள் முகாமைத்துவப் பாடநெறி | மனித வளங்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | 2016.02.19 - 01 நாள் | 1 |
| 03 | ஒலிக்கூடத்தினுள் மற்றும் வெளியில் ஒலி முகாமைத்துவம் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 2016.02.20 2016.05.08 | 1 |
| 04 | அரச உபாயங்கள் மற்றும் சர்வதேச அலுவல்கள் டிப்ளோமா | பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவகம் | 01 வருடம் | 6 |
| 05 | கணனி அடிப்படையிலான சாரதி அனுமதிப் பத்திர பயிற்சி நெறி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்(SLIDA) | 2016.03.14 முதல் 2016.04.01 | 1 |
| 06 | பொதுவான ஆங்கில பயிற்சி நெறி | பிரிட்டிஸ் கவுன்சில் | 2016.07.19 முதல் 2016.09.22 | 1 |
| 07 | டிஜிட்டல் முறையில்புகைப்படமெடுத்தல் | புகைப்படமெடுத்தல் பற்றிய பாடசாலை – ஹேகொட | 06 மாதம் | 1 |
| 08 | நட்டம், நட்டத்தை ஈடுசெய்தல் மற்றும் பதிவழித்தல் சம்பந்தமான பாடநெறி | திறன் அபிவிருத்தி நிதியம் | 2016.07.28 முதல் 2016.07.29 | 1 |
| 09 | அபிவிருத்தி சம்பந்தமான கற்கைகள் - பட்டப்பின் கற்கைப் பாடநெறி 2016/2017 | கொழும்பு பல்கலைக்கழகம் | 01 வருடம் | 1 |
| 10 | அரச முகாமைத்துவம் பற்றிய முதுமாணிக் கற்கைப் பாடநெறி 2015/2017 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்(SLIDA) | 02 வருடம் | 2 |
| 11 | கிரெபிக் நிர்மாணங்கள் பாடநெறி | விஜய கிரெபிக் லிமிடட் தனியார் கம்பனி | 06 மாதம் | 1 |

- **வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**

| இல. | பாடநெறியின் பெயர் | நாடு | பயிற்சிக் கால எல்லை | கலந்து கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அரசாட்சி மற்றும் அரச நிர்வாகம் பற்றிய பாடநெறி | சிங்கப்பூர் | 2016.01.14 2016.01.23 | 1 |
| 2. | அரச சேவையின் மேம்பாட்டுக்காக இ-அரச மூலோபாய அபிவிருத்தி பற்றிய பாடநெறி | கட்டார் | 2016.01.24 2016.01.30 | 3 |
| 3. | பொருளாதார அபிவிருத்தி பற்றிய பாடநெறி | அமெரிக்கா | 2016.02.07 2016.02.12 | 1 |
| 4. | சர்வதேச பங்கேற்பாளர்களுக்கான மூலோபாய பகுப்பாய்வு - 2016 | மலேசியா | 2016.07.19 2016.08.07 | 1 |
| 5. | நிர்வாக அபிவிருத்தி – நவீனமயப்படுத்தல் மற்றும் வளர்ச்சிப்போக்கு பற்றிய பாடநெறி | மலேசியா | 2016.07.23 2016.08.01 | 1 |
| 6. | பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதி முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு | சீனா | 2016.08.17 2016.09.19 | 7 |
| 7. | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உத்தியோகத்தர்களுக்கான வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான கருத்தரங்கு | சீனா | 2016.08.25 2016.09.14 | 2 |
| 8. | "ஒரே பிராந்தியம் மற்றும் ஒரே மார்க்கம்" ஊடாக செல்லும் நாடுகளுக்கு ஒத்துழைப்பை உறுதிசெய்தல்பற்றிய பாடநெறி | சீனா | 2016.09.09 2016.09.27 | 1 |
| 9. | தலைமைத்துவப் பயிற்சி (அரச துறை) பாடநெறி | சிங்கப்பூர் | 2016.09.25 2016.10.01 | 2 |
| 10. | சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களுக்கு உள்சாட்டு அரச நிர்வாகம் பற்றிய பாடநெறி | ஜப்பான் | 2016.10.10 2016.10.29 | 1 |
| 11. | சீன உதவி வேலைத் திட்டத்திற்கான நிதிச் சேவைகள் பாடநெறி | சீனா | 2016.10.11 2016.11.24 | 3 |
| 12. | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்காக சீனாவின் அபிவிருத்திச் செயற்பாடுகள் சம்பந்தமான செயலமர்வு | சீனா | 2016.10.13 2016.11.02 | 2 |
| 13. | பொருளாதார உலகமயமாக்கல் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான சீனாவின் உற்பத்திகள் | சீனா | 2016.10.13 2016.11.02 | 3 |
| 14. | தெற்காசிய நாடுகளின் இராஜதந்திரிகளுக்கான செயலமர்வு | சீனா | 2016.11.02 2016.11.24 | 2 |

## 7.2. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்

இ - அரச கொள்கைக்கு ஏற்றவாறு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பலவீனங்கள் மற்றும் தேவைகளை இனங்காண்பதும், அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவின் அடிப்படை இலக்காகும்.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் **(Official Website)**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை எப்போதும் இற்றைப்படுத்துவதன் மூலம் அதனைப் பயன்படுத்துவோருக்கு காலத்துகேற்ற, சரியான தகவல்களை விரைவாக வழங்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் அரச துறையின் இணையத்தளங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல்களைக் (Cyber Attacks) கருத்திற் கொண்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக (Web Application Firewall)அமைப்பொன்று புதிதாக நிறுவப்பட்டது. மேலும் உத்தியோகபூர்வ இணைத்தளத்தின் மூலக்குறி (Source Code)மற்றும் தாபித்தல் (Web hosting)என்பவற்றில் மேலும் ஏதாவது பலவீனங்கள் குறைபாடுகள் ஏற்படின் அவற்றைக் கண்டறிந்து விதப்புரை வழங்க (SLCERT) நிறுவனத்துடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணையத்தளத்தின் முழுமையான கட்டுப்பாடு தற்போது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவிடம் காணப்படுகிறது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மெயில் சேர்வர் (Internal Mail Server)**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேவைக்குப் பயன்படுத்திய சேர்வர் 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அது தற்போதைய தேவைக்குப் போதியதாக காணப்படவில்லை. அதன் காரணமாக மின்னஞ்சல் சேவைக்கு அதிக கொள்ளளவும், திறனும் கொண்ட புதிய சேர்வர் கணனியொன்றைக் கொள்வனவு செய்து நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக பயன்படுத்தப்பட்ட மென்பொருளின் சமீபத்திய பதிப்புக்கு (Latest Version) இற்றைப்படுத்த முடிந்துள்ளது. மேலும் மின்னஞ்சல் சேவையில் Spam Mail நீக்குவதற்காகப் புதிய SpamFirewallஅமைப்பொன்று புதிதாக நிறுவப்பட்டது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேவையில் மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட இற்றைப்படுத்தல்கள் ஊடாக மிகவும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன் மிக்க மின்னஞ்சல் சேவையொன்றைப் பேணிச் செல்ல முடிந்துள்ளது.

- தகவல் தொழிநுட்ப உட்கட்டமைபு வசதிகளை மேம்படுத்தல்

மின் துண்டிப்பு காரணமாக தகவல் தொழிநுட்ப சேவைகளுக்கு ஏற்படும் தடையினைக் கருத்திற் கொண்டு அதிக கொள்ளளவு மிக்க UPS இயந்திரமொன்று நிறுவப்பட்டுள்ளது.

பிரதம அமைச்சர் அலுவலகம், அலரி மாளிகை வளவு அலுவலகம் மற்றும் மல் வீதி வளவு அலுவலகம் என்பவற்றின் உள்ளக வலையமைப்புத் தொகுதியில் காணப்படும் குறைபாடுகளை இணங்கண்டு, அவற்றை நீக்கி, புதிய வசதிகளுடன் கூடிய வினைத்திறன் மிக்க வலையமைப்புத் தொகுதியொன்றை நிறுவுவதற்காக தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் LGN 2.0 கருத்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ்வரும் செயல்முறைகளை முகாமைத்துவம் செய்தல் **(Workflow Management)**

1) கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவம்
2) விருந்தினர் வருகையை முகாமைத்துவம் செய்தல்
3) வேலைகளை ஒப்படைத்தல்
4) ஆவணங்கள் முகாமைத்துவம்
   மிகுந்த வசதிகளுடன் கூடிய மென்பொருள் அமைப்பொன்றை நிறுவுவதற்காக தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்ப முகவர் நிறுவனம் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
5) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளகப் பயன்பாட்டுக்கு மென்பொருள் அமைப்புக்களை உருவாக்குதல்.
   பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக தாபன அலுவல்களை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான மென்பொருள்களை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவினால் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் மென்பொருள்களுக்கெனச் செல்லும் செலவினத்தைக் குறைத்துக் கொள்ள முடிவதுடன், பிரதிகளாக நவீனமயப்படுத்தும் (version update) சந்தர்ப்பமும் காணப்படுகிறது. அதற்கமைய தற்போது ஆவண முகாமைத்துவ அமைப்பொன்று (Document Managment System)உருவாக்கப்பட்டுள்ளதுடன் அது உள்ளக கடித அலுவல்களை இலகுபடுத்துவதற்காக உற்பத்தித் திறன் மிக்க வகையில் பயன்படுத்தப்படுகிறது.

- **அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடையாவாறு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தகவல் மற்று தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவு முன்நின்று செயற்படும்.

இதற்கு மேலதிகமாக, நிறுவனத்தின் கீழ்வரும் அலுவல்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்படும்.

1) பணியாட் தொகுதி உத்தியோகத்தர்களின் நடைமுறை தகவல் தொழிநுட்ப பயிற்சித் தேவைகளை இனங்காணுதல் மற்றும் தேவையான பயிற்சியை வழங்கல்.
2) நிறுவனத்தின் தகவல் தொழிநுட்ப செயல்திட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
3) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்திற்கு ஏற்புடைய சேவை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு இற்றைப்படுத்திய நிலையில் பேணிச் செல்லுதல்.
4) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைக் கொள்வனவு செய்வதற்கான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்குபற்றி ஏற்புடைய விவரக்குறிப்புக்களைத் தயாரித்தல் மற்றும் விதப்புரைகள் வழங்கல்.

## 7.3 அலரி மாளிகை வளவு முகாமைத்துவம்

1) அலரி மாளிகை வளவில் கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 05 மாடி நிர்வாகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பித்தல் -

அலரி மாளிகை வளவில் கட்டுமானப் பணிகள் இடைநடுவே நின்று போயிருந்த 05 மாடி நிர்வாகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பித்து கட்டுமானப் பணிகளில் 90% க்கு அதிகமாக நிறைவு செய்தல்.

2) பிரதம அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் பிரதம அமைச்சரின் பாதுகாப்பு பிரிவின் பெண் அதிகாரிகளுக்கான வீட்டு வசதிகளை நவீனமயப்படுத்தி வேலைகளை நிறைவு செய்தல்.

3) அலரி மாளிகையின் பிரதான நிர்வாகக் கட்டிடத்தின் அருகாமையில் உள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின் நான்காம் மாடியின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

4) கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகளுக்கிடையே இடம்பெறும் சந்திப்புக்கள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்களுக்கு திறந்தவெளி ஊடக மேடையொன்றை நிறுவுதல்.

5) அலரி மாளிகை வளவின் பிரதான நுழைவாயிலிலிருந்து மாளிகை வளவு வரையான பகுதி வீதியை புனரமைத்தல்.

6) சுற்றாடல் அமைச்சு மற்றும் கொழும்பு மாநகர சபையுடன் ஒருங்கிணைந்து அந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் குப்பைகளை முகாமைப்படுத்தும் வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்தல்.

7) அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் ஏனைய முக்கிய விருந்தினர்கள் பங்குபற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்கள் 15 இனை சிறப்பாக ஏற்பாடு செய்து நடாத்துதல்.

8) தேசிய முக்கியத்துவம் மிக்க ஏனைய அமைச்சுக்கள்/ நிறுவனங்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்படும் விசேட வைபவங்களை அலரி மாளிகை வளவின் பிரதான மண்டபத்தில் நடாத்துவதனையும், அவற்றினை சிறப்பாக ஏற்பாடு செய்வதனையும் ஒருங்கிணைப்பு செய்தல்.

9) டிஜிட்டல் ஊடகப் பிரிவொன்றை ஆரம்பித்தல் மற்றும் அலரி மாளிகை வளவில் களஞ்சிய முகாமைத்துவத்திற்காக மொத்தப் பதிவேட்டு தரவுத் தொகுதியொன்றை தயாரித்து செயற்படுத்தல்.

# 08. நிதிசார் முன்னேற்றம்

### 08.1. நிதிசார் முன்னேற்றம்

வருடாந்த அரவு செலவுத் திட்டத்தின் செலவுத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செலவுகளை மேற்கொள்வதற்கான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஏற்பாடு பிரதம அமைச்சர் அலுவலகம், பொது நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் எனும் பிரதான 02 கருத் திட்டங்களின் கீழ் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக 878 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினங்களுக்காக 496 மில்லியன் ரூபாவும் என மொத்தமாக 1374 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டின் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் நிதிசார் முன்னேற்றத்தின் பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கருத்திட்டம் | மொத்த நிதி ஏற்பாடு (மில்.ரூபா) | | நிதிசார் முன்னேற்றம் (மில்.ரூபா) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதனம் | மீண்டெழும் | | மூலதனம் | |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 436 | 430 | 417 | 96% | 362 | 85% |
| பொது நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் | 442 | 66 | 335 | 76% | 53 | 81% |
| **மொத்தம்** | **878** | **496** | **752** | 86% | **415** | 84% |

பிரதம அமைச்சர் அலுவலக கருத்திட்டத்தின் கீழ் அலரி மாளிகை வளவு, விசும்பாய, நுவரெலியா மற்றும் பென்தோட்டை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பற்றுக்கான நிர்வாக, வழங்கல் மற்றும் பராமரிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுடன் தொடர்பான செலவுகளைப் போன்றே புதிய கட்டுமானங்கள், அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவீனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது நிர்வாகம் மற்றும் தாபன ரீதியிலான சேவைகள் கருத் திட்டத்தின் கீழ் பிரதமரின் செயலாளர் அலுவலகம், தேசிய ஊடக நிலையம், நல்லிணக்கப் பொறிமுறைச் செயலகம், ஜப்பான் - இலங்கை ஒத்துழைப்புச் செயலகம், ஊழல் ஒழிப்புக் குழுச் செயலகம் போன்ற பிரிவுகளின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவீனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய கருத் திட்டங்கள் தொடர்பான தகவல்களின் பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1) அலரி மாளிகை வளவில் நிர்மாணிக்கப்படும் ஐந்து மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளில் சுமார் 75% பௌதீக ரீதியிலான முன்னேற்றம் காணப்படுவதுடன், அதற்காக ரூபா 75 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

2) நுவரெலியாவில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தை பூரணமாக பழுதுபார்த்தல் மற்றும் பென்தோட்டை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்த்தல் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் 76 மில்லியன் ரூபாவாகும்.

3) நல்லிணக்கப் பொறிமுறைச் செயலகத்திற்கான புதிய அலுவலகமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அலுவலகத்தை தாபிப்பதற்குத் தேவையான அலுவலக தளக்கோளம், அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 68 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

4) பிரதமரின் பாதுகாப்பு பிரிவுக்குத் தேவையான அம்புலன்ஸ் வண்டி, வாகனங்களைக் கொண்டுசெல்வதற்கான 02 வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு 34 மில்லியன் ரூபாவாகும்.

5) பிரதமரின் செயற்பாட்டு அலுவலகத்திற்கான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல், இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக 10 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.